www.penakural.com மலர்: 03 இதழ்: 04 பிப்ரவரி 2025 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்




## AI-ன் வளர்ச்சி: மனித எதிர்காலம் என்னவாகும்?



## தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும்:

அன்புமணி ராமதாஸ்


ஏ.எத்திராஜ்
மாநில செயற்குழு உறுப்பினர்
அவர்களின் இல்ல
திருமண
விழா
சமூக நீதி போராளி மாமனிதர் மருத்துவர் அய்யா அவர்களின் நல்லாசியுடன்
திருமண விழாவிற்கு வருகை தரும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில தலைவர் அண்ணன் அன்புமணி ராமதாஸ்
எம்பி
அவர்களை
வருக வருக என
அன்போடு வரவேற்கின்றோம்
வாருங்கள் வாழ்த்துங்கள்
பாட்டாளி மக்கள் கட்சி
மேட்டுக்குப்பம், 195வது வட்டம்

# பேனா குரல்
**PENA KURAL** தமிழ் மாத இதழ்

**RNI No.: TNTAM/2022/85375**

ஆண்டு: 03 இதழ்: 04 பிப்ரவரி 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு
வெளியிடுபவர் : **N V சிவசங்கர்**
ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,
கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**
இணை ஆசிரியர் : **K.ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், L.குமரேசன், K.J.ரமேஷ், R.சஞ்சீவ் குமார்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, தமிழ் வீரன், D.ராஜேஷ், S.ஜெயராஜ், ஜெபசீலன், K.மாரிதுரை**

புகைப்பட நிருபர்:
**V.கவியரசன்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123



நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு, மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை, தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு:
**044-35906002, 8754582123**
**info@penakural.com**
**news@penakural.com**
**www.penakural.com**



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *


ஆசிரியர் குரல்

# அடுத்த தலைமுறைகளுக்கான நமது கடமை

தேசிய கல்விக்கொள்கை, மும்மொழிக் கொள்கை என்பதில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. முதல் மொழி அவரவர் தாய் மொழி என்கிறது. மூன்றாவது மொழியாக ஏதேனும் ஓர் இந்திய மொழி எனக்குத் தேவையில்லை; அது எங்கள் உரிமை என்று பேசும்போதே ஏனைய இந்திய மாநிலங்களும் நம்மைப் பின்பற்றி தமிழை அப்படிச் சொல்லத் தொடங்கினால் அது நமக்குப் பெருமையாகுமா? நமது நிலைப்பாடு இந்திய ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் எதிரானதாகாதா?

ஒருவருக்கொருவர் எனது மொழியை ஏற்காதவர் என்ற காழ்ப்புணர்வை வளர்த்துக் கொள்வது சரியா? அல்லது இணக்கத்துடன் நாடு முழுவதும் தமிழும் தமிழ்நாட்டில் பிற இந்திய மொழிகளும் என்று பரிவர்த்தனை செய்துகொள்வது சரியா? தமிழின் தொன்மையை- பெருமையை தேசமெங்கும் கொண்டு சேர்ப்பது நமது கடமை எனில், இந்த மூன்றாவது இந்திய மொழியை ஏற்பது அதற்கான சரியான வழிதானே... ஏன் எதிர்க்க வேண்டும்?

தமிழகத்தில் ஒரு மொழியைக் கற்பது சுமை, தேர்வு எழுதுவது சிரமம் என்றெல்லாம் தொடர்ந்து பேசப்படுவது மாணவர்களின் மனதில் பெரிய அளவில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. ஒரு மொழியைக் கற்பதன் பயன் பொருளாதாரம், வேலைவாய்ப்பு குறித்தது மட்டுமல்ல. அது மனிதனின் மனவளம், சிந்தனை, ரசனை சார்ந்ததும் ஆகும்.

வசதி உடையவர்கள் விரும்பியதைக் கற்றுக்கொள்ளலாம். வசதி இல்லாதவர்கள் கற்க உரிமையில்லை என்ற நிலைப்பாடு அரசமைப்புச் சட்டத்துக்கே விரோதமானது. அரசியல்வாதிகளின் மகன் விரும்பினால் எந்த மொழியும் கற்றுக்கொள்ள முடிகிறது; ஓர் ஏழை மாணவனுக்கு அது சாத்தியமில்லை.

கற்கும் வாய்ப்புடையவர்களை விமர்சிப்பது நமது நோக்கமல்ல; ஆனால், கடைக்கோடியில் இருக்கும் குழந்தை வரை அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதே நமது விருப்பம். உருது மொழி கற்றுக் கொடுக்கும் அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. வரவேற்கிறோம். தெலுங்கும், கன்னடமும், மலையாளமும், சம்ஸ்க்ருதமும், வங்காளமும் என இன்னும் வாய்ப்புகளை விஸ்தரிப்பதில் என்ன தவறு?

திணிப்பு என்ற சொல்லில் அர்த்தமில்லை. தேசிய கல்விக்கொள்கை மூன்று மொழிகள் குறித்துப் பேசினாலும், மூன்றாவது மொழியை மாணவர்கள் மீது அரசு திணிக்க முடியாது என்பதற்கும் வழிவகை செய்துள்ளது. மாணவர்களின் விருப்பம், பெற்றோர் ஆசிரியர் அமைப்புகள் தரும் விருப்ப முறையீடுகள் என மாணவர்கள் பெருமளவில் விரும்பும் மொழியை மட்டுமே பள்ளியில் வழங்க முடியும். எந்த மொழியையும் அரசு கட்டாயப்படுத்த முடியாது.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்வதால் நமது மாணவர்களுக்கான கல்வித்தரம் மேம்படுமேயன்றி குறைவுபடாது. ஏற்கெனவே தமிழகத்தில் ஆயிரக்கணக்கான தனியார் பள்ளிகளில் மூன்று மொழிகள் பயிற்றுவிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை அனைவருக்குமாக விரிவுபடுத்துவதில் தவறில்லை. இதில் அரசியல் செய்ய வேண்டாம்.

– ஆசிரியர்




# UPI பயனர்களே கவனம்; புதிய ஜம்ப் டெபாசிட் மோசடி! எப்படி பாதுகாப்பாக இருப்பது?

UPI பேமெண்ட் முறை இந்தியர்களின் உண்மையான நண்பராக மாறியுள்ளது, ஏனெனில் அதிகமான மக்கள் தொடர்ந்து பரிவர்த்தனைகளைச் செய்ய இதைப் பயன்படுத்துகின்றனர். வசதி மற்றும் வேகமான செயலாக்க நேரம் காரணமாக, UPI லட்சக்கணக்கான மக்களுக்கு ஒரு பிரபலமான பரிவர்த்தனை முறையாக மாறியுள்ளது.

UPI மொபைல் தளம் மூலம் வங்கிக் கணக்குகளுக்கு இடையே நிகழ்நேர பணப் பரிமாற்றங்களை செயல்படுத்துகிறது. இருப்பினும், அதன் பாதுகாப்பு குறித்த கவலைகள் சமீபத்தில் எழுந்துள்ளன, குறிப்பாக 'ஜம்ப் டெபாசிட்' (Jump Deposit) மோசடி என்று கூறப்படும் புதிய மோசடி அரங்கேறி வருகிறது. இந்த மோசடி எப்படி நடக்கிறது? எப்படி பாதுகாப்பான பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வது? விரிவாக பார்க்கலாம்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

UPI **இன் பாதுகாப்பு கட்டமைப்பு பரிவர்த்தனைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது:**

**பயனர் அங்கீகாரம்:** ஒவ்வொரு UPI பரிவர்த்தனைக்கும் ஒரு தனித்துவமான தனிப்பட்ட அடையாள எண் (PIN) மூலம் பயனரின் வெளிப்படையான அங்கீகாரம் தேவைப்படுகிறது. இந்த PIN இல்லாமல், எந்த பரிவர்த்தனையையும் முடிக்க முடியாது, இது கணக்கு வைத்திருப்பவர் மட்டுமே பணம் செலுத்துவதை அங்கீகரிக்க முடியும் என்பதை உறுதி செய்கிறது.

**சாதன பிணைப்பு:** UPI பயனரின் வங்கிக் கணக்கை அவர்களின் பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் குறிப்பிட்ட சாதனத்துடன் இணைக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட சாதனத்திலிருந்து மட்டுமே பரிவர்த்தனைகளைத் தொடங்க முடியும் என்பதை இந்த பிணைப்பு உறுதி செய்கிறது, இது கூடுதல் பாதுகாப்பைச் சேர்க்கிறது.

**பாதுகாப்பான பரிவர்த்தனைகள்:** கணக்கு இருப்பைச் சரிபார்ப்பது போன்ற எளிய செயல்களுக்கு கூட UPI PIN ஐ உள்ளிட வேண்டும். இந்த முன்னெச்சரிக்கை அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்கிறது மற்றும் அனைத்து செயல்பாடுகளுக்கும் ஒரு அளவிலான சரிபார்ப்பைச் சேர்க்கிறது.

**ஜம்ப் டெபாசிட் மோசடி**

ஜம்ப் டெபாசிட் மோசடியில் மோசடி செய்பவர்கள் பயனர்களின் வங்கிக் கணக்குகளில் சிறிய தொகையை டெபாசிட் செய்து, பின்னர் பெரிய பரிவர்த்தனைகளை அங்கீகரிக்க அவர்களை ஏமாற்றுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) இந்தக் கவலைகளை நிவர்த்தி செய்து, UPI தளத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் எதுவும் கண்டறியப்படவில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. UPI PIN மூலம் பயனரின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் UPI பரிவர்த்தனைகள் நடக்காது என்பதை NPCI மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது.

ஒவ்வொரு பரிவர்த்தனையும் பயனரால் தொடங்கப்பட்டது என்றும் சரியான UPI PIN இல்லாமல் தொடர முடியாது என்றும் NPCI வலியுறுத்தியுள்ளது. பயனர்கள் தங்கள் PINகளைப் பகிர்ந்து கொள்ளாத வரை, இந்தத் தேவை அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளின் சாத்தியத்தை நீக்குகிறது. பயனர்கள் பரிவர்த்தனை செய்யும்போது கவனமாக இருக்க வேண்டும், உங்கள் பரிவர்த்தனைத் தொகையை மீண்டும் சரிபார்த்து, கட்டணத்தைச் செயலாக்குவதற்கு முன் விவரங்களை அனுப்ப வேண்டும். UPI கட்டணத்தைச் செயல்படுத்தும்போது அவசரப்படுவதைத் தவிர்க்கவும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

UPI **பாதுகாப்பானது என்றாலும், பயனர்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:**

**அதிகாரப்பூர்வ பயன்பாடுகளைப் பயன்படுத்தவும்:** கூகிள் பிளே ஸ்டோர் அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோர் போன்ற நம்பகமான மூலங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட UPI பயன்பாடுகளைப் பயன்படுத்துவதை உறுதிசெய்யவும். பாதுகாப்பை சமரசம் செய்யக்கூடிய மூன்றாம் தரப்பு பயன்பாடுகளைத் தவிர்க்கவும்.

**தகவலறிந்திருங்கள்:** சமீபத்திய மோசடிகள் மற்றும் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் குறித்து உங்களைத் தொடர்ந்து அப்டேட் செய்து கொள்ளுங்கள். விழிப்புணர்வு என்பது டிஜிட்டல் யுகத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான ஒரு முக்கிய அங்கமாகும்.

டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான UPI தொடர்ந்து பாதுகாப்பான மற்றும் நம்பகமான தளமாக உள்ளது. ஜம்ப் டெபாசிட் மோசடி, UPI தளத்தில் எந்த அடிப்படையையும் கொண்டிருக்கவில்லை. பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், பயனர்கள் தங்கள் நிதித் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் UPI-ஐப் பயன்படுத்தலாம்.

**உங்கள் UPI பின்னை ஒருபோதும் பகிர வேண்டாம்:** UPI பின்-ஐ மற்றவர்களுடன் பகிர்வது உங்கள் கணக்கின் பாதுகாப்பை சமரசம் செய்கிறது மற்றும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்கு வழிவகுக்கும்.

**கட்டண கோரிக்கைகளைச் சரிபார்க்கவும்:** எந்தவொரு கட்டண கோரிக்கையின் விவரங்களையும் எப்போதும் இருமுறை சரிபார்க்கவும். கோரிக்கை அறிமுகமில்லாததாகவோ அல்லது சந்தேகத்திற்குரியதாகவோ தோன்றினால், அதை நிராகரிப்பது பாதுகாப்பானது.

- M.திலிப் குமார்

# சுற்றுச்சுவர் இல்லாமல் இயங்கி வரும் அரசு மருத்துவமனை!






திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த ஆத்தூர் குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பனந்தோப்பு பகுதியில் கடந்த 5 ஆண்டுகளாக 24 மணி நேர அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு நாள்தோறும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.இந்நிலையில் சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் அமைக்கப்படாமல் உள்ளதால் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவி வருகிறது.

இரவு நேரத்தில் மகப்பேறு அடைந்த பெண்கள் குழந்தைகள் மற்றும் உடன் தங்கும் உதவியாளர்கள் அச்சத்துடன் இருந்து வருகின்றனர். அதுபோக மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் தேவை இருப்பதாகவும் பல மாதங்களாக கோரிக்கை வைத்து வருவதாகவும் பணியாற்றி வரும் ஊழியர்கள் தெரி-வித்தனர்.

இதுநாள் வரையிலும் ஜெனரேட்டர் வசதியும் ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

உயிர்காக்கும் மருத்துவமனைகளுக்கு போதிய அடிப்படை வசதிகளை செய்து தர உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

- S.மோகன்

# தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்கும் திட்டத்தை கைவிட அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்!

தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிடவில்லை என்றால் பல்லாயிரக் கணக்கான உழவர்களைத் திரட்டி மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "சென்னையை அடுத்த திருவள்ளூர், ஊத்துக்கோட்டை வட்டங்களில் தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்க 1146 ஏக்கர் விளைநிலங்கள் உட்பட மொத்தம் 1703 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு முடிவு செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்ப்பதற்காக முப்போகம் விளையும் நிலங்களை பறிக்க தமிழக அரசு துணை போவது கண்டிக்கத்தக்கது; ஏற்க முடியாதது. தமிழக அரசின் 2022-23ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், தமிழகத்துல் உலகளாவிய பங்களிப்புடன் அறிவு நகரம் உருவாக்கப்படும்; அதில் உலகின் புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் கிளைகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை பாமக-வும் வரவேற்றது. ஆனால், இந்தத் திட்டத்தை அரசு நிலங்களில் செயல்படுத்துவதற்கு பதிலாக சென்னைக்கு அருகில் விளை நிலங்களில் செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. அதற்காக ஊத்துகோட்டை வட்டத்திலுள்ள கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல் மாளிகைப் பட்டு, செங்கத்தாக்குளம், எர்ணாங்குப்பம், திருவள்ளூர் வட்டத்திலுள்ள வெங்கல் ஆகிய கிராமங்களிலிருந்து 1703 ஏக்கர் நிலங்களை கையகப் படுத்த மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.



இவற்றில் அரசு புறம் போக்கு நிலங்கள் 556 ஏக்கர் தவிர மீதமுள்ள 1146 ஏக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் ஆகும். அவற்றை உழவர்களிடமிருந்து பறிக்க முயல்வதை நியாயப்படுத்த முடியாது. தமிழ்நாடு அறிவு நகரம் திட்டத்திற்காக கையகப்படுத்தப்படவுள்ள நிலங்கள் ஆரணி ஆற்றங்கரையில் அமைந்திருப்பவை.

மூன்று போகங்களும் சிறப்பாக விளையக் கூடியவை. அந்த நிலங்கள் தான் பல்லாயிரம் உழவர்களுக்கும், உழவுத் தொழிலாளர்களுக்கும் வாழ்வாதாரமாக திகழ்கின்றன. தங்களின் கவுரவமான வாழ்க்கைக்கு வகை செய்யும் நிலங்களை உழவர்கள் கடவுளாக பார்க்கின்றனர். அந்த நிலத்தை பறிக்க அரசு முயல்வதை உழவர்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

அதுவும் கையகப்படுத்தப்படவுள்ள 1146 ஏக்கர் நிலங்களுக்கு விலையாக ரூ.174.52 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது ஓர் ஏக்கருக்கு சராசரியாக ரூ.15 லட்சம் மட்டுமே வழங்கப்படும். ஓர் ஏக்கர் நிலத்தில் ஓராண்டுக்கு ரூ.10 லட்சம் வரை வருவாய் ஈட்டித் தரும் நிலங்களுக்கு ஒட்டுமொத்தமாகவே ரூ.15 லட்சம் விலை வழங்குவதென்பது உழவர்களையும், அவர்களின் உடமைகளையும் சுரண்டும் செயலாகும்.

இதற்கு அரசு துணை போகக் கூடாது. தமிழ்நாடு அறிவு நகரம் அமைப்பதையோ, அங்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் வளாகங்களை ஏற்படுத்துவதையோ பாமக ஒரு போதும் எதிர்க்கவில்லை. தமிழகத்தின் உயர்கல்வி வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அவை தேவை என்பதில் பாமக உறுதியாக உள்ளது. ஆனால், வேளாண் விளை நிலங்களை அழித்து விட்டு தான் அவற்றை அமைக்க வேண்டும் என்பதை ஏற்க முடியாது.

தமிழக அரசு நினைத்தால், தென் மாவட்டங்களில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மதுரைக்கு அருகில் உள்ள அரசு நிலங்களில் அறிவு நகரத்தை அமைக்கலாம். கொங்கு மண்டலத்திலும் இத்தகைய அறிவு நகரத்தை அமைக்கும் அளவுக்கு நிலங்கள் உள்ளன. சேலத்தில் நகரத்திற்குட்பட்ட பகுதிகளில் சேலம் இரும்பாலைக்கு சொந்தமான 4000 ஏக்கர் நிலம் உள்ளது.

அங்கு தமிழ்நாடு அறிவு நகரத்தை அமைக்கவும் தடையில்லை. இவ்வளவு வாய்ப்புகளையும் ஒதுக்கிவிட்டு, சென்னைக்கு அருகில் வேளாண் விளை நிலங்களை கையகப்படுத்தி தான் அறிவு நகரம் அமைக்கப்படும் என அரசு கூறுவதை ஏற்க முடியாது. அதையும் கடந்து வெளி நாட்டு பல்கலைக்கழகங்களின் வளாகங்களை அமைக்க 1703 ஏக்கர் நிலம் தேவையில்லை.

கையகப்படுத்தப்படவுள்ள நிலங்களில் நான்கில் ஒரு பங்கு பரப்பளவில் வெளிநாட்டு பல்கலை கழகங்களின் வளாகங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு மீதமுள்ள நிலங்கள் அனைத்தும், தமிழ்நாடு அறிவு நகரத்தை அமைக்கும் நிறுவனத்தால், நில வணிகம் செய்யப்படும் என்பது தான் உண்மை. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கடந்த காலங்களில் பல்வேறு பெயர்களில் நகரங்கள் அமைக்கப்பட்ட போது இது தான் நடந்திருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இப்படியாக, சில நிறுவனங்கள் நில வணிகம் செய்து கோடிக் கணக்கில் லாபம் பார்க்க வேண்டும் என்பதற்காக பல தலைமுறைகளாக வேளாண்மை செய்து வந்த நிலங்களை உழவர்களிடமிருந்து பறிப்பது நியாயமற்றதாகும். அதற்கு மாறாக, எங்கெல்லாம் அரசுக்கு சொந்தமான நிலங்கள் உள்ளனவோ?

அங்கெல்லாம் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளை வளாகங்களை தமிழக அரசு அமைப்பது தான் சரியானதாக இருக்கும். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பது உள்ளிட்ட திட்டங்களுக்காக நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்துத் தேவைகளுக்காகவும் கையகப்படுத்தப்படும் இடங்களில் பெரும்பாலானவை வேளாண் விளை நிலங்கள் ஆகும்.

தொழில் துறை, கல்வித் துறை, விளையாட்டுத் துறை, உட்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளுக்காகவும் வேளாண்விளை நிலங்கள் கையகப்படுத்தப் பட்டால், வேளாண் தொழிலும், உணவுப் பாதுகாப்பும் என்னவாகும்? என்பதை உணராமலேயே கண்மூடித்தனமாக விளை நிலங்களை கையகப்படுத்த அரசு துடிப்பது நியாயமல்ல.

இந்தப் போக்கை அரசு கைவிட வேண்டும். திருவள்ளூர் மாவட்டம் கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல் மாளிகைப்பட்டு, செங்கத்தாக்குளம், எர்ணாங்குப்பம், வெங்கல் ஆகிய ஊர்களில் 1703 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். அப்பகுதிகளில் ஒரு கைப்பிடி மண்ணைக் கூட கையகப்படுத்தக் கூடாது.

அதற்கு மாறாக, நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு முயன்றால், அதை எதிர்த்தும், கண்டித்தும் பல்லாயிரக் கணக்கான உழவர்களைத் திரட்டி பாமக சார்பில் மாபெரும் மக்கள் திரள் போராட்டத்தை நானே தலைமையேற்று நடத்துவேன் என்று தமிழ்நாடு அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன்." என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

– துரை. சந்துரு

# ஒரே இமெயிலில் 3,000 பேரை வேலையை விட்டு நீக்கிய நிறுவனம்!

## என்ன நடந்தது?



கோவை ஆர்.எஸ் புரம் மற்றும் சுங்கம் பகுதிகளில் 'Focus Edumatics' என்ற தனியார் ஐடி நிறுவனம் இயங்கி வந்தது. இந்த நிறுவனத்தின் கிளைகள், பெங்களூர் மற்றும் சென்னையிலும் உள்ளன. அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட அந்த ஐடி நிறுவனத்தில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வந்தனர். அமெரிக்காவில் உள்ளவர்களுக்கு இங்கிருந்தபடி ஆன்லைனில கல்வி கற்பிக்கும் தனியார் பயிற்சி மையமாக இயங்கி வந்தது என்று கூறப்படுகிறது.

நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அமெரிக்காவில் இருக்கும் நிலையில், அவர் 3 மாதம் ஒருமுறை கோவை வந்து சென்றுள்ளார்.

2010ம் ஆண்டு ஆரம்பித்த கம்பெனி 15 வருடங்களாக இயங்கி வந்தது. திடீரென அவர்களுக்கு ஒரு அழைப்பு வந்தது.. பிற்பகல் மதியம் 12 மணி வரை ஐடி சர்வீஸ்க்காக shutdown செய்கிறோம் என்று அழைப்பு வந்ததாம்.பின்னர் வொர்க் ஃப்ரம் ஹோம் எடுத்துக் கொள்ளுங்கள்.. இல்லை என்றால் லீவு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்களாம்..

இதனால் எல்லாருமே வீட்டிற்கு போய் வேலை செய்துள்ளார்கள். சனி மற்றும் ஞாயிறு விடுமுறையாகும். இந்நிலையில் சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு மீட்டிங் ஏற்பாடு செய்திருந்தார்கள்.. அவசர மீட்டிங் என்று கூறி ஏற்பாடு செய்திருந்திருக்கிறார்கள். அதன்பிறகு 9.15க்கு மெயில் வருகிறது.. உடனடியாக நிறுவனம் shutdown செய்யப்படுவதாக கூறினார்களாம் அதாவது கோவையில் உள்ள ஃபோக்கெஸ் எடுமாட்டிக்ஸ் நிறுவனக்கிளை ஒரே நாளில் நிரந்தரமாக மூடப்படுவதாக மெயில் வந்தது.. கோவையில் உள்ள எல்லா ஊழியர்களும் உடனடியாக பணி நீக்கம் செய்யப்படுவதாகவும் கூறினார்களாம்.

இதனால் ஒரே நாளில் அவர்களுக்கு வேலை போய்விட்டது.. Focus Edumatics நிறுவனம் பணியாளர்களுக்கு அனுபவ சான்றிதழ், சம்பளம், கிராஜூவிட்டி, மெர்டனிடிட்டி லீவில் உள்ளவர்களுக்கு சம்பளம் என எதுவுமே வரவில்லை. அதில் வேலை செய்யும் ஊழியர்கள் எல்லாம் தலைமறைவாகி விட்டதாக நிறுவனத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

### 3500 பேரின் நிலைமை என்ன?

இதனால் கோவையில் 2000 பேர், இந்தியாவின் பிற பகுதிகளில் 1500 பேர் என 3500 பேரின் வேலை பறிபோயுள்ளது. மேலும், அவர்களுக்கான இம்மாதம் ஊதியம் வருமா? பிஎப் தொகை என்னவாகும்? செட்டில்மண்ட் தொகை கிடைக்குமா? என கேள்வி எழுந்துள்ளது.

எந்த விதமான முன்னறிவிப்பும் இன்றி நிறுவனம் திடீரென மூடப்பட்டதால், 3000 பேர் நிலைமை மிகப்பெரிய சோகத்தை சந்தித்துள்ளது. இதனால் தங்களுக்கு நியாயம் வேண்டும் என 3000 பேர் நிறுவனத்தின் முன்பு போராட்டம் நடத்தி, ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்தனர்.

மேலும், நிறுவனத்தில் வேலை பார்த்த சான்றிதழ் கூட வழங்காமல் பணிநீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனம் மூடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் மீது குற்றசாட்டு உள்ளது போல மின்னஞ்சல் அனுப்பி வைக்கப்பட்டுள்ள காரணத்தால், நாங்கள் எங்கு சென்று வேலைக்கு சேர்வது? அங்கு கேள்வி கேட்டால் எப்படி பதில் சொல்வது? என கேள்வி எழுப்பி இருக்கின்றனர்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து Focus Edumatics நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த ஊழியர்கள் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கலங்கி நின்றபடி அவர்கள் கொடுத்த பேட்டி பலரையும் நெகிழ வைத்தது. இந்த விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்த அரசு, தொழிலாளர் நலத்துறை மூலம் பேச்சுவார்த்தை நடத்தியது.

இது தொடர்ந்து சம்பள தொகையை பெற்று தர வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றியவர்களுக்கு செட்டில்மென்ட், கிராஜுவிட்டி உள்ளிட்டவற்றைப் பெற்றுத் தர வேண்டும்." என்று அவர்கள் கோவை மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்தனர். இதையடுத்து இந்த விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்த அரசு, தொழிலாளர் நலத்துறை மூலம் பேச்சுவார்த்தை நடத்தியது. இதையடுத்து குறிப்பிட்ட ஐடி நிறுவனம் பணியாற்றிய 3,000 ஊழியர்களுக்கு ஜனவரி 31-ல் நிலுவை ஊதியம், மற்றும் பணிக்கொடை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

- K.மாரிதுரை




PROPSERV
Property Related Allied & Legal services

★ REGISTRATION
★ PATTA
★ GIRAMA NATHAM
★ CMDA APPROVAL
★ BUILDING PLAN
★ NAME TRANSFER
★ SETTLEMENT
★ LEGAL HEIR CERTIFICATE
★ CORPORATION TAXES
★ LAND CEILING
★ SLUM BOARD
★ HOUSING BOARD
★ PROPERTY IDENTIFICATION
★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com




# பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்!

பிரதமர் மோடி 2025 பட்ஜெட்டை 140 கோடி இந்தியர்களின் 'ஆசைகளின் பட்ஜெட்' என்று பாராட்டினார். இது வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் குடிமக்கள் நலனை மையமாகக் கொண்டது. பட்ஜெட் சேமிப்பு, முதலீடு மற்றும் நுகர்வை அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்திற்கான 2025 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டினார். 140 கோடி இந்தியர்களுக்கான "ஆசைகளின் பட்ஜெட்" என்று பிரதமர் நரேந்திர மோடி விவரித்துள்ளார். இது ஒவ்வொரு குடிமகனின் கனவுகளையும் நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை கூறியுள்ளார். வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்காக புதிய துறைகளைத் திறப்பதன் மூலம் பொது மக்களிடையே, குறிப்பாக இளைஞர்களிடையே பொருளாதார பங்களிப்பை அதிகரிக்க பட்ஜெட் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் எடுத்துரைத்தார்.

இதை படையை பெருக்குகிறது என்று அழைத்தார். இந்த பட்ஜெட் ஆனது சேமிப்பு, முதலீடு, நுகர்வு மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என்று அவர் கூறினார். அரசாங்க வருவாயை மையமாகக் கொண்ட முந்தைய பட்ஜெட்டுகளைப் போலல்லாமல், இந்த பட்ஜெட் குடிமக்கள் நலனை மையமாகக் கொண்டது என்று பிரதமர் மோடி அடிக்கோடிட்டுக் காட்டினார். மக்களின் பாக்கெட்டுகள் நிரப்பப்படுவதையும், அவர்களின் சேமிப்பு அதிகரிப்பதையும், அவர்கள் தேசிய வளர்ச்சியில் தீவிரமாக பங்கேற்பதையும் உறுதி செய்வதே முக்கிய நோக்கம் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்த பட்ஜெட், பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் நிதி பாதுகாப்பிற்கு வலுவான அடித்தளத்தை அமைக்கிறது என்று அவர் வலியுறுத்தினார். பட்ஜெட்டில் உள்ள வரலாற்று சீர்திருத்தங்களில் ஒன்று அணுசக்தியில் தனியார் துறை பங்களிப்பை ஊக்குவிக்கும் முடிவு ஆகும். பிரதமர் மோடி இந்த நடவடிக்கையை ஒரு மாற்றும் செயலாகக் குறிப்பிட்டார், இது இந்தியாவின் வளர்ச்சிக்கு சிவில் அணுசக்தியின் அதிக பங்களிப்பை உறுதி செய்கிறது.

ஒரு கோடி கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்கவும் டிஜிட்டல் மயமாக்கவும் ஞான பாரத் மிஷன்' தொடங்கப்பட்டதை மேற்கோள் காட்டி,



இந்தியாவின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தியதையும் அவர் பாராட்டினார். உள்கட்டமைப்பு அந்தஸ்து துறைக்கு வழங்கப்பட்டது, உள்கட்டமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது. இந்த நடவடிக்கை தன்னம்பிக்கையை ஆதரிக்கும். வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் சுற்றுலா திறனைத் திறக்கும் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

பெரிய கப்பல்களை கட்டுவதை ஊக்குவிப்பதன் மூலம், இந்த முயற்சி அரசாங்கத்தின் ஆத்ம நிர்பர் பாரத் (சுயசார்பு இந்தியா) தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்துப்போகிறது. புதிய வணிக முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் SC, ST மற்றும் பெண் தொழில்முனைவோருக்கு உத்தரவாதங்கள் இல்லாமல் ₹2 கோடி வரை புதிய கடன் திட்டத்தை பட்ஜெட் அறிமுகப்படுத்தியது. கூடுதலாக, முதல் முறையாக, கிக் தொழிலாளர்கள் e-Shram போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டு சுகாதார சேவைகளை அணுக முடியும் என்று பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– R.ஹரிகிருஷ்ணன்

# திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு





36வது தேசிய சாலை பாதுகாப்பு மாதம் முன்னிட்டு 28-01-25 அன்று வட்டார போக்குவரத்து அலுவலகம் திருப்பத்தூரில் புதியதாக பொறுப்பேற்றிருக்கும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. ரி.பன்னீர்செல்வம் அவர்கள், அலுவலகத்திற்கு வந்திருக்கும் அனைத்து பொது மக்களுக்கும், ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், வாகன டீலர்கள், கன்சல்டன்கள் சாலை பாதுகாப்பு குறித்து ஒரு மணி நேரம் வகுப்புகள் எடுக்கப்பட்டது.

இதில் ஹெல்மெட் அணிவது குறித்து விரிவான விரிவுரை அளிக்கப்பட்டது. அலுவலக ஊழியர்கள் உள்பட சுமார் 200 நபர்கள் கலந்து கொண்டனர். மேலும் பொதுமக்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில் அளித்து சிறப்பான முறையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து சந்தேகங்களுக்கு பதில் அளிக்கப்பட்டது.

– S.மோகன்



# வங்கதேச ஊடுருவல்காரர்களால் நாட்டிற்கு பேராபத்து!

டெல்லியில் வங்கதேச பிரஜைகள் சட்டவிரோதமாக குடியேறுவதற்கு உதவி செய்யும் மிகப்பெரிய நெட்வொர்க்கை போலீசார் கண்டறிந்துள்ளனர். இந்த கும்பலைச் சேர்ந்த வங்கதேச தம்பதி உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள், நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைகின்றனர். அவர்களுக்கு இந்திய பிரஜைக்கான அனைத்து ஆவணங்களும் கிடைக்க போலியாக பல்வேறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

அதுபோன்று டில்லியில் சட்டவிரோதமாக குடியேறிய வங்கதேச பிரஜைகளை கண்டுபிடித்து, நாடு கடத்தும்படி கோரிக்கை எழுந்தது. துணைநிலை கவர்னர் வி.கே.சக்சேனாவிடம் முஸ்லிம் அமைப்பினர் முறையிட்டனர்.

இதையடுத்து, டில்லியில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வங்கதேசிகளை கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறைக்கு அவர் உத்தரவிட்டிருந்தார். போலீசாரும் டில்லியில் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் முக்கிய நிகழ்வாக, சட்டவிரோதமாக டில்லிக்கு வரும் வங்கதேசிகளுக்கு இந்திய பிரஜைக்கான ஆவணங்களை போலியாக தயாரித்துக் கொடுத்த கும்பல் பற்றி போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதுதொடர்பாக நகர தெற்கு இணை போலீஸ் கமிஷனர் சஞ்சய் குமார் ஜெயின் கூறியதாவது:-

இரண்டு வங்கதேசத்தைச் சேர்ந்த பிலால் ஹோசன், 28, மற்றும் அவரது மனைவி சப்னா, 23, ஆகிய இருவரை டில்லி போலீசார் கைது செய்தனர். இவர்களுடன் இணைந்து செயல்பட்ட அசாம் மாநிலத்தைச் சேர்ந்த அமினூர் இஸ்லாம், 37, குருகிராமைச் சேர்ந்த ஆஷிஷ் மெஹ்ரா, 23, ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், மிகப்பெரிய நெட்வொர்க்குடன் இயங்குவது விசாரணையில் தெரிய வந்தது. சட்டவிரோதமாக நம் நாட்டுக்குள் நுழையும் வங்கதேசிகளுக்கு நீண்ட காலமாக இவர்கள் போலி ஆவணங்களை தயாரித்துக் கொடுத்துள்ளனர்.

இவர்கள் கொடுத்த தகவலின்படி, ஏராளமானோர் டில்லிக்குள் சட்டவிரோதமாக ஊடுருவியது தெரிய வந்துள்ளது. அவர்களை அடையாளம் காணும் பணி நடக்கிறது.

இந்த நெட்வொர்க்கில் உள்ளவர்களை கைது செய்யும் பணி நடக்கிறது. அத்துடன் வங்கதேசத்தில் இருந்து நம் நாட்டுக்குள் ஊடுருவ பயன்படுத்தப்படும் 'இரு கழுதைப்பாதை'கள் கண்டறியப்பட்டுள்ளன. வங்கதேசத்தின் துர்காபூரில் இருந்து மேகாலயாவின் பாக்மாராவிற்கு இடையே இந்த பாதைகளை சட்டவிரோத குடியேறிகள் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்த பாதையில் இவர்கள் நடந்தே வந்துள்ளனர்.

பின் அங்கிருந்து அசாம் மாநிலத்தின் கிருஷ்ணாய், நியூ பொங்கைகான் ஆகிய ரயில் நிலையங்களில் இருந்து நாட்டின் பிற பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளனர். போலி ஆதார் அட்டை தயாரித்துக் கொடுக்க ஒரு நபரிடம் இருந்து 4,000 முதல் 5,000 ரூபாய் வசூலித்துள்ளனர்.

பிலால் ஹோசன் 2022ம் ஆண்டு மேகாலயா - அசாம் எல்லை வழியாக நம் நாட்டிற்குள் நுழைந்து தன் மனைவியுடன் டில்லியில் குடியேறியுள்ளார். இவர் குருகிராமில் காஸ்மெடிக் கடை மற்றும் அழகு நிலையம் நடத்தி வந்தார். அவரிடம் போலி ஆதார், பான்கார்டுகள் உள்ளன.

இந்த கைது நடவடிக்கைக்குப் பின், தெற்கு டில்லி காவல் எல்லைக்குட்பட்ட அனைத்து காவல் நிலையங்களிலும் உள்ள வங்கதேச பிரிவுகளை புதுப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**13 வங்கதேசிகள் நாடு கடத்தல்**

நகரில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி சோதனையின்போது, ஆவணங்கள் சரிபார்க்கப்படுகின்றன. அப்போது, கபஷேரா பகுதியில் வசித்த வங்கதேச பெண்ணை போலீசார் அடையாளம் கண்டனர்.

அவரிடம் பான் கார்டு மற்றும் ஆதார் அட்டை உள்ளிட்ட போலி இந்திய அடையாள ஆவணங்கள் இருந்தன. டில்லியில் அவர் நான்கு ஆண்டுகளாக சட்டவிரோதமாக தங்கியிருந்தது தெரிய வந்தது.

அதேபோல், அர்ஜன்கர் மெட்ரோ ரயில் நிலையத்தில் கடந்த 28ம் தேதி ஏழு வங்கதேசிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் உட்பட 13 சட்டவிரோத வங்கதேசிகளை தெற்கு நகர காவல் துறையினர், வெளிநாட்டினர் பிராந்திய பதிவு அலுவலகம் மூலம் நாடு கடத்தினர்.

இவர்களைத் தவிர 31 ஆப்பிரிக்க பிரஜைகளும் கடந்த ஆண்டு நாடு கடத்தப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

திருப்பூர் பல்லடம் அருகே, போலி ஆதார் அட்டைகளைக் கொடுத்து சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த 30 பேரை போலீசார் கைது செய்தனர்.

திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் மங்கலம், ஊத்துக்குளி பகுதியில் சட்டவிரோதமாக வங்கதேசத்தினர் தங்கியிருப்பதாக தனிப்படை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. சந்தேகத்தின் பேரில், சிலரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது போலி ஆதார் அட்டைகளைக் கொடுத்து சட்டவிரோதமாக, வங்கதேச நாட்டை சேர்ந்த சிலர் பதுங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த 30 பேரைக் கைது செய்த, போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்களிடமிருந்து ஆதார் உள்ளிட்ட ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இது குறித்து போலீசார் கூறியதாவது: பல்லடம் அருகே போலீசார் சோதனையில், போலி ஆதார் அட்டைகளைக் கொடுத்து சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தினர் 30 பேர் சிக்கி உள்ளனர்.

சிலரிடம் ஆவணங்கள் இருந்தன. மற்றவர்கள் முறைகேடாக தங்கியிருந்தது தெரிந்தது. கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

வங்கதேச எல்லை வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவல், கடத்தல் போன்ற சட்டவிரோத செயல்களை தடுப்பதற்காக எல்லையில் வேலை அமைக்கும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இருதரப்பு ஒப்பந்தத்தை மீறி எல்லையில் 5 இடங்களில் இந்தியா வேலி அமைக்க முயற்சிப்பதாக வங்கதேச அரசு குற்றம் சாட்டியது.

இந்தியா - வங்கதேசம், 4,096 கி.மீ., நீளம் உடைய எல்லையை பகிர்ந்து கொள்கிறது. இது, உலக அளவில், 5வது அதிக நீளமுள்ள எல்லையாக கருதப்படுகிறது.

வங்கதேசத்தில் இருந்து எல்லை வழியாக நம் பகுதிக்குள் ஊடுருவல், கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் நடப்பதை கட்டுப்படுத்த, முள்வேலி அமைக்கும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டது.

எல்லையில் இருதரப்பு ஒப்புதல் இன்றி கட்டமைப்பு பணிகளை நிறைவேற்றக்கூடாது என, இருநாட்டுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் இருப்பதால், வங்கதேசம் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

இந்தியாவுக்கான வங்கதேச துணைத் தூதர் நூருல் இஸ்லாமை வெளியுறவு அமைச்சகம் நேரில் அழைத்து இந்திய - வங்கதேச எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து விவாதித்தது.

இதையடுத்து, இது தொடர்பாக நேரில் விளக்கம் தரக் கோரி அடுத்த சில மணி நேரத்தில் டாக்காவில் உள்ள இந்திய தூதருக்கு சம்மன் அனுப்பியது. இதைத் தொடர்ந்து இந்திய தூதர் பிரணாய் வர்மா, வங்கதேச வெளியுறவு செயலாளர் ஜாஷிம் உதினை சந்தித்தார். இந்த சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நீடித்தது.

இந்தச் சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பிரணாய் சர்மா, "பாதுகாப்புக்காக எல்லையில் வேலி அமைக்கும் விவகாரத்தில் இந்தியா - வங்கதேசம் இடையே புரிதல் உள்ளது. இது தொடர்பாக இரு நாட்டு எல்லைப் பாதுகாப்பு படையினரும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். எல்லையில் குற்றங்களை தடுப்பதற்கு ஒரு கூட்டு அணுகுமுறை ஏற்படும் என நம்புகிறோம்" என்றார்.

இந்நிலையில், டெல்லியில் உள்ள வங்கதேச துணைத் தூதர் நூருல் இஸ்லாமை வெளியுறவு அமைச்சகம் நேரில் அழைத்தது. இந்திய - வங்கதேச எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து அவருடன் விவாதித்தது.

இந்தியா - வங்கதேசம் இடையிலான தூதரக உறவுகள் வரலாற்று ரீதியாக ஸ்திரமாக இருந்து வருகிறது. ஆனால் வங்கதேசத்தில் மாணவர்கள் தலைமையிலான புரட்சியால் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அரசு கவிழ்க்கப்பட்டு, அவர் இந்தியாவில் தஞ்சம் அடைந்த பிறகு இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டது. வங்கதேசத்தில் இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீதான தாக்குதலை இடைக்கால அரசு கட்டுப்படுத்த தவறியும் இதற்கு காரணமாக அமைந்தது.

ஷேக் ஹசீனாவுக்கு எதிரான குற்றவழக்குகளில் அவர் விசாரணையை எதிர்கொள்வதற்காக அவரை வங்கதேசத்துக்கு நாடு கடத்துமாறு இந்தியாவிடம் வங்கதேச இடைக்கால அரசு கடந்த மாதம் கேட்டுக்கொண்டது. ஆனால் இதற்கு இந்தியா உடன்படவில்லை.

**- நா வீ சிவசங்கர்**

# திருப்பரங்குன்றம் விவகாரத்தில் திமுக அரசு வேடிக்கை பார்க்கிறது



## ஆர்.பி.உதயகுமார் குற்றச்சாட்டு!

திருப்பரங்குன்றம் மலையில் மத்திய தொல்லியல் அதிகாரிகள் ஆய்வு நடத்தி நினைவுச் சின்னங்கள் அருகே எச்சரிக்கை பலகை அமைத்தனர்.

திருப்பரங்குன்றம் மலை மீது இந்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் சமணர் குகை மற்றும் குகை கோயில்கள் உள்ளன. இங்குள்ள குகையில் சில நாட்களுக்கு முன்பு பச்சை பெயிண்ட் அடிக்கப்பட்டது. இது தொடர்பாக திருப்பரங்குன்றம் போலீஸில் பராமரிப்பு பணியாளர் ராஜன் புகார் அளித்தார். போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், மத்திய தொல்லியல் துறை அதிகாரிகள் திருப்பரங்குன்றம் மலையில் கடந்த இரு நாட்களாக ஆய்வு நடத்தினர். பின்னர் மலையில் உள்ள சமணர் படுகைகள் உட்பட தொல்லியல் நினைவுச்சின்னங்கள் முன்பு எச்சரிக்கை பலகைகளை நட்டனர். அந்த பலகைகளில் தமிழ், இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் எச்சரிக்கை வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதில், 'இந்த நினைவுச் சின்னம் 1958ம் ஆண்டு பழங்கால நினைவுச் சின்னங்கள் தொல்பொருள் ஆய்வு இடங்கள் மற்றும் எஞ்சிய பகுதிகள் சட்டத்தின் கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவுச் சின்னத்தை அழிக்கின்றவர், அகற்றுகின்றவர், சிதைக்கின்றவர், மாற்றி அமைக்கின்றவர், இதன் தோற்றப் பொலிவை குலைக்கின்றவர், இதனை ஆபத்துக்கு உட்படுத்துகின்றவர் அல்லது தவறாக பயன்படுத்துகின்றவர் யாராக இருந்தாலும், அவருக்கு 2010-ம் ஆண்டு பழங்கால நினைவுச் சின்னங்கள் தொல்பொருள் ஆய்வு இடங்கள் மற்றும் எஞ்சிய பகுதிகள் சட்டத்தின் படி இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதம் அல்லது தண்டனை மற்றும் அபராதம் இரண்டும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்' எனக் கூறப்பட்டுள்ளது.

**முருகனின் திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலையாக மாற்ற முயற்சியா?**

அறுபடை வீடுகளில் முதற்படை வீடான மதுரை திருப்பரங்குன்றம் கந்தர் மலையை சிக்கந்தர் மலையாக மாற்ற முயற்சிப்பதை கண்டித்தும், தொடர் போராட்டம் நடத்துவது குறித்தும் ஜன.12ல் திருப்பரங்குன்றம் சன்னதி தெரு ஆர்.எஸ்.டி., திருமண மண்டபத்தில் முருக பக்தர்கள், ஹிந்து அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சியினர் பங்கேற்கும் ஆலோசனைக்கூட்டம் நடக்கிறது.

திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தர்காவிற்கு சென்று வழிபட எந்த தடையும் இல்லை. ஆனால் சில நாட்களுக்கு முன் ஆடு பலி கொடுக்க ராஜபாளையம் மிலாம்பட்டி சையது அபுதாகீர் 53, என்பவர் முயற்சித்தார். போலீசார் தடுத்தனர். இதை கண்டித்து எஸ்.டி.பி.ஐ., கட்சி மற்றும் சில இஸ்லாமிய அமைப்புகள் தர்காவில் முஸ்லிம்கள் தொழுகை நடத்த போலீசார் அனுமதி மறுப்பதாக கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.



**அரசு மறுப்பு**

இதை மறுத்துள்ள தமிழக அரசின் சமூக ஊடக சரிபார்ப்பகம், 'இது முற்றிலும் பொய். தர்காவில் ஆடுகளை பலிகொடுப்பது தொடர்பாக கோர்ட் மூலம் தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் தொடர்ந்து பொய் காரணங்களை கூறி பிரசாரம் செய்து வருவதாக' தெரிவித்துள்ளது.

இதற்கிடையே திருப்பரங்குன்றம் கந்தர் மலை புனிதத்தை காக்கும் வகையில் ஜன.12ல் காலை 10:00 மணிக்கு ஹிந்து அமைப்புகள், பக்தர்கள், பல்வேறு கட்சியினர் பங்கேற்கும் ஆலோசனைக்கூட்டம் நடக்கிறது. இதில் ஹிந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**மலையை அபகரிக்க முயற்சி**

இதுகுறித்து அக்கட்சியின் மதுரை மாவட்ட தலைவர் சோலை கண்ணன் கூறியதாவது: திருப்பரங்குன்றம் மலையில் காசி விஸ்வநாதர் கோயில் உள்ளது. பழநி ஆண்டவர் கோயில் மலை பாதை வழியாக காலம் காலமாக காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு வேல் எடுத்து செல்லப்படுகிறது.

மலை அடிவாரத்தில் குடி கொண்டிருக்கும் முருகப்பெருமானின் தலைக்கு மேல் 'நாங்கள் ஆடு வெட்டுவோம்' என்று சொல்வது முருகப்பெருமானை இழிவுபடுத்தி அவமானப்படுத்தும் செயல். காசி விஸ்வநாதர் கோயிலுக்கு செல்லும் பக்தர்களின் மனதை புண்படுத்துவதோடு, ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமையையும், மரபுகளையும் பறிக்கும் செயல்.

தற்போது திருப்பரங்குன்றம் முருகப்பெருமானின் கந்தர்மலையை சிக்கந்தர் மலை என்று அழைப்பதும், காலண்டரில் சிக்கந்தர் மலை என்று அச்சிடுவதும், அவர்களது விளம்பரங்களில் சிக்கந்தர் மலை என்று போஸ்டர் அடித்து ஒட்டுவதும், காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு செல்லும் பக்தர்களை தடுப்பதுமாக சில அமைப்புகள் போட்டி போட்டு செயல்படுகின்றன.

எப்படியாவது முருகப்பெருமானின் மலையை சிக்கந்தர் மலையாக மாற்றவும் நமது முப்பாட்டன் முருகப்பெருமானின் மலையை அபகரிக்கவும் ஆக்கிரமிக்கவும், ஹிந்து - முஸ்லிம் மத கலவரத்தை உண்டாக்கவும் மிகப்பெரிய சதி திட்டத்தோடு சில அமைப்புகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. இதை தடுப்பது குறித்தும், தொடர் போராட்டம் நடத்துவது குறித்தும் ஜன.12ல் ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது. இவ்வாறு கூறினார்.

**"திருப்பரங்குன்றம் விவகாரத்தில் திமுக அரசு வேடிக்கை பார்க்கிறது" - ஆர்.பி.உதயகுமார் குற்றச்சாட்டு**

''திருப்பரங்குன்றம் விவாரத்தில் இந்து - முஸ்லிம் சகோதரர்களிடையே அமைதியை ஏற்படுத்தாமல் வேடிக்கை பார்க்கிறது,'' என்று சட்டப்பேரவை எதிர்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதாவை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கையை வைத்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமி முதல்வராக இருந்தபோது திருமங்கலம் தொகுதியில் உள்ள செக்கானூரணி பேருந்து நிலையம் சீரமைப்பு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்தனர். அதனைத் தொடர்ந்து நான் கோரிக்கை வைத்த அடிப்படையில், 8 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்க தற்போது பூமி பூஜை போடப்பட்டுள்ளது.

இந்த பேருந்து நிலையத்திற்கு தென்மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்தவரும், கட்சித்தீவு பிரச்சனைக்கு சட்டமன்றத்தில் குரல் கொடுத்த மூக்கையா தேவரின் திருவுருவ சிலையை வாயிலில் அமைத்தும், பேருந்து நிலையத்திற்கு மூக்கையா தேவர் பெயரையும் சூட்ட வேண்டும். திருமங்கலம், ராஜபாளையம் ரோட்டில் நான்கு வழி சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இதில் இந்த சாலை ஆலம்பட்டி, சுப்புலாபுரம் ஊருக்குள் வருகிறது. மக்கள் கோரிக்கையை ஏற்று அணுகு சாலை மற்றும் சுரங்கப்பாதை அமைத்திட வேண்டும்.

கடந்த தேர்தல் அறிக்கையில் திமுக 525 வாக்குறுதியை கொடுத்தனர். இவற்றில் பெரும்பாலானவற்றை இன்னும் நிறைவேற்றவில்லை. நீதிமன்றமே ஸ்டாலின் அரசின் சட்டம் ஒழுங்கை கடுமையாக கண்டித்துள்ளது, தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கருணாநிதி சிலைகளையும், அவர் பெயரிலான திட்டங்களையும் தொடங்குவதில்தான் திமுக அரசு அக்கறையாக உள்ளது. விட்டால் அண்ணா உருவாக்கிய தமிழ்நாட்டை கூட கருணாநிதி நாடு என்று பெயரை கூட சூட்டிவிடுவார்கள்.

டங்ஸ்டன் விவகாரத்தில் கே.பழனிசாமி இரண்டரை மணி நேரம் சட்டமன்றத்தில் திமுகவை தோலுரித்துக் காட்டினார், அவர் கொடுத்த நெருக்கடியாலே சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், டங்ஸ்டன் திட்டம் வந்தால் ராஜினாமா செய்வேன் என்று கூறினார். அதிமுக ஆட்சியில் தமிழகம் மதக்கலவரம் இல்லாத பாதுகாப்பான மாநிலமாக இருந்தது. தற்போது இந்துகள், முஸ்லிம்கள் சகோதரர்கள் போல் வசிக்கும் திருப்பரங்குன்றத்தில் பல ஆண்டுகளாக இல்லாத அளவில் ஏன் இந்த புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு திருப்பரங்கன்றம் விவகாரத்தில் அமைதி ஏற்படுத்தாமல் ஏன் வேடிக்கை பார்க்கிறது'' என்று அவர் தெரிவித்தார்.

– B.நவின்குமார்

## பெற்றோர்கள் கவனத்திற்கு!

# திடீர் அழைப்பில் ஏமாறாதீங்க!

## பள்ளிக் கல்வித்துறை எச்சரிக்கை!

பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை என்ற பெயரில் பெற்றோர்களிடம் வங்கி விவரங்கள் கேட்டு மோசடி நடைபெறுகிறது. இந்நிலையில், பெற்றோர்கள் இதுபோன்ற அழைப்புகளை நம்ப வேண்டாம் என பள்ளிக் கல்வித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

**கல்வி உதவித்தொகை**

தமிழ்நாட்டில் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு பல்வேறு விதமான கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படுகிறது. குறிப்பாக எஸ்சி/எஸ்டி, பிசி, எம்பிசி பிரிவு மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தரவுகள் மற்றும் வங்கி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அந்தந்த துறைகள் மூலம் கல்வி உதவித்தொகை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**பெற்றோர்களிடம் மோசடி**

இந்நிலையில், இதனை பயன்படுத்தி சில மோசடி கும்பல்கள் மாணவர்களின் பெற்றோர்களை தொடர்புக் கொண்டு கல்வி உதவித்தொகை வந்திருப்பதாகவும், அதனை உங்கள் வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டும் என கூறி, வங்கி கணக்கு எண் மற்றும் ஒடிபி உள்ளிட்ட தரவுகளை பெற்று மோசடியில் ஈடுபட தொடங்கியுள்ளனர். இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறைக்கு தகவல் கிடைத்த நிலையில், எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.







**அழைப்புகளை நம்ப வேண்டாம்**

இதுபோன்று செல்போனில் அழைத்து கல்வி உதவித்தொகை வந்துள்ளதாக கூறி, வங்கி கணக்கு மற்றும் ஒடிபி கேட்கும் நபர்களை நம்ப வேண்டாம் என பள்ளிக் கல்வித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. அரசு பள்ளிகளில் வழங்கும் கல்வி உதவித்தொகையானது SC/ST, BC, MBC நலத்துறைகள் மற்றும் சமூக நலத்துறை மூலம் நேரடியாகவே மாணவர்களின் வங்கி கணக்குகளில் செலுத்தப்படுகிறது. Phonepe, Gpay உள்ளிட்டவற்றின் மூலம் உதவித்தொகை அனுப்பப்படாது. எனவே பெற்றோர்கள் இதுபோன்ற அழைப்புகளை நம்ப வேண்டாம் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசு வழங்கும் கல்வி உதவித்தொகையை பொறுத்தவரை, பள்ளிகளிலேயே மாணவர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு, வங்கி கணக்கு விவரங்களுடன் சம்மந்தப்பட்ட துறைக்கு சமர்பிக்கப்படும். அதன் மூலம் நேரடியாகவே வங்கி கணக்கில் ஒவ்வொரு வருடமும் அனுப்பப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகை விவரங்களை பெற்றோர்கள் வங்கி தரவுகளில் அறிந்துகொள்ளலாம். மேலும், வங்கி மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்தி மூலமும் அறிந்துகொள்ளலாம். இதற்கான எந்த துறைகளில் இருந்து பெற்றோர்களுக்கு அழைப்புகள் மேற்கொள்ளப்படாது. எனவே, இதுபோன்ற அழைப்புகளை நம்பி, தரவுகளை அளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- K.ரமேஷ்குமார்

# சென்ட்ரல் கோபுரம் கட்டிட கட்டுமானத்துக்கு அடிக்கல் நாட்டினார் முதலமைச்சர் ஸ்டாலின்








சென்னை, தலைமைச் செயலகத்தில் 14.02.2025 அன்று நடைபெற்ற விழாவில் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதன்படி, சென்னை சென்ட்ரல் பகுதியிலுள்ள மத்திய சதுக்க வளாகத்தில், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் சார்பில் 4 அடித்தளங்கள், தரைத்தளம் மற்றும் 27 அடுக்குமாடியுடன் ரூ.350 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சென்ட்ரல் கோபுர கட்டடத்திற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

உயர்கல்வித்துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 120 கோடியே 54 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், உள்விளையாட்டு அரங்கங்கள், கழிவறைத் தொகுதிகள், விடுதிக் கட்டடம் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக அவர் திறந்து வைத்தார்.

மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 6 கோடியே 51 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கோடியே 41 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கிருஷ்ணாஜிபட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் சிங்கவனம் - ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஆயுஷ் பிரிவு பல்நோக்குக்கூடம் மற்றும் சுகாதாரத் தொகுதிக் கட்டடம் ஆகியவற்றையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**- நா வீ சிவசங்கர்**

# விவசாயி, செய்தியாளர், கவிஞர் த.மு.செல்வமுருகன் அவர்களின் நினைவு மலரஞ்சலி, ரத்த தானம், மரக்கன்று, புத்தகப்பை வழங்கி, அன்னதானம் நிகழ்ச்சி









மக்கள் விருப்பம் பத்திரிகை ஆசிரியரும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நலச் சங்கத்தின் மாநில தலைவருமான த.மு.தருமராஜா அவர்களின் அண்ணனும், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நலச்சங்கம் இராமநாதபுரம் மாவட்ட அமைப்பாளரும், மக்கள் விருப்பம் பத்திரிகை இராமநாதபுரம் மாவட்ட நிருபருமான த.மு.செல்வமுருகன் அவர்கள் கடந்த ஜனவரி 02ம் தேதி உடல்நல குறைவால் காலமானார்.

அவர்களின் 30ஆம் நாள் நினைவு நாளில் மலர் அஞ்சலி, படத்திறப்பு, இரத்ததானம், மரக்கன்று வழங்குதல், புத்தகப்பை (School Bag) வழங்குதல், திருநங்கை சகோதரிகளுக்கு உதவி, மாணவர் கல்வி நிதி உதவி உள்ளிட்ட நிகழ்ச்சி சென்னை வேளச்சேரியில் 01.02.2025 அன்று சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மாநில தலைவர் எஸ.சௌந்தர்ராஜன், திமுக சைதை கிழக்கு பகுதி செயலாளரும், 13 வது மண்டல குழு தலைவரும், 172 வது மாமன்ற உறுப்பினருமான இரா.துரைராஜ், தமிழ்நாடு ஏழை, எளியோர் நடுத்தர மக்கள் நல சங்க மாநில தலைவர் V.S.லிங்க பெருமாள் Bsc,







வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவியும், திருநங்கைகள் சகோதரிகளின் போராளி மந்த்ரா, பேராண்மை ஆசிரியர் விமலேஸ்வரன், வெற்றி சரித்திரம் பத்திரிகை ஆசிரியர் வி.பாஸ்கர், பேனா குரல் பத்திரிகை ஆசிரியர் சிவசங்கர், சித்தர் உலகம் பத்திரிகை ஆசிரியர் மோகனா சபேசன், ரிப்போர்ட்டர் பிளாஷ் பத்திரிகை ஆசிரியர் பாலாஜி, விசாரணை தடயம் பத்திரிகை ஆசிரியர் கோபிநாத், உழவர் மேடை பத்திரிகை ஆசிரியர் சௌந்தர்ராஜன், உள்ளாட்சி முரசு பத்திரிகை உதவிஆசிரியர் விவசாயி ஜெயராமன், அரசு மலர் பத்திரிகை உதவிஆசிரியர் அயன்புரம் பாபு, அம்மா எக்ஸ்பிரஸ் சிறப்பு செய்தியாளர் கயல்விழி,செய்தியாளர் சேகுவேரா ஜெய்சங்கர், மக்கள் விருப்பம் பத்திரிகை உதவி ஆசிரியர் சு.முரளி D.Phorm, புகைப்படக் கலைஞர் சுரேஷ், சென்னை மாவட்ட செய்தியாளர் எஸ்.வி.கோபிநாத் BA, தலைமை நிருபர்கள் வழக்கறிஞர் க.கவியரசன் Bsc, LLB, கே.குமார், மு.சுரேஸ், காஞ்சித்தலைவன் பத்திரிகை, தேசபக்தி நாளிதழ்களின் சிறப்பு நிருபர் புவனேஸ்வரி,

வழக்கறிஞர் பிரபு, பாமக 172 வது வட்ட செயலாளர் ஜனகன், பனங்காட்டுப்படை நாடிமுத்து, தமிழ்நாடு வணிகர் சங்க பேரவையின் தென்சென்னை தெற்கு மாவட்ட தலைவர் ஆர்.பி.எஸ்.சுந்தர், இளைஞரணி செயலாளர் சிவகுமார், அமைப்பாளர் பி.வர்கீஸ் பாண்டியன், தென்சென்னை மேற்கு மாவட்ட தலைவர் துரைமாணிக்கம், வேளச்சேரி நேரு நகர், வண்டிக்காரன் ரோடு, அனைத்து வியாபாரிகள் பொதுநல சங்க கௌரவத் தலைவர்கள் பெ.மாரியப்பன், சி.பொன்னுசாமி, காப்பாளர்கள் ஆ.நடராஜன்,

சி.பாலகிருஷ்ணன், இரா.ஞானவேல், செயலாளர் சையத் அலி, பொருளாளர் ந.ரமேஷ், துணைத்தலைவர் பி.சரவணன், துணைச்செயலாளர் ஆ.ஆறுமுகம், பகுதி செயலாளர் சிவக்குமார், இளைஞர் அணி தலைவர் வி.செல்லப்பா, இளைஞர் அணி துணைத் தலைவர் மு.புவனேஷ் பாண்டியன், மற்றும் உறவினர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**- நா வீ சிவசங்கர்**

# உங்க வங்கி கணக்கை பயன்படுத்தாம இருக்கீங்களா?

# ரிசர்வ் வங்கி எடுக்கும் முக்கிய முடிவு!

ஆன்லைன் மோசடிகளைத் தடுக்கும் வகையில், செயல்பாட்டில் இல்லாத வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட மூன்று வகையான வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு ரிசர்வ் வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எந்தவொரு பணப் பரிவர்த்தனையும் இல்லாத வங்கிக் கணக்குகள், நீண்ட காலமாக பூஜ்ஜிய தொகையை மட்டும் வைத்திருக்கும் வங்கிக் கணக்குகள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சமீபகாலமாக மோசடி சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஏடிஎம் கார்டின் எண்கள், வங்கி தொடர்பான விவரங்கள், பாஸ்வேர்டு, ஒன் டைம் பாஸ்வேர்டு, ஆதார், பான் தொடர்பான உள்ளிட்ட விவரங்களை முன்பின் அறியாத நபர்களிடம் தெரிவிக்கக் கூடாது என்று தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.




இருப்பினும், படித்தவர்களைக் கூட ஏமாற்றும் அளவுக்கு புதுப்புது ரூட்டுகளில் யோசித்து மோசடி சம்பவங்களை சில கும்பல்கள் செயல்படுத்தி வருகின்றன. அண்மைக் காலமாக உங்கள் பெயரில் ஒரு கூரியர் வந்துள்ளது. அதில், போதைப் பொருள்கள், போலி பாஸ்போர்ட்டுகள் உள்ளன. உங்கள் வங்கிக் கணக்கில் வராத, மோசடி பணங்கள் உள்ளன என்று போலீஸ் போல வேடமிட்டுக்கூறும் நபர்களிடம் பல பேர் ஏமாறும் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்நிலையில், பயன்பாட்டில் இல்லாத வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு ரிசர்வ் வங்கி புதிய நெறிமுறைகளை அமல்படுத்தியுள்ளது. அந்த வகையில், மூன்று வகையான வங்கிக் கணக்குகளை மூட ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

குறிப்பாக, பயன்பாட்டில் இல்லாத வங்கிக் கணக்குகளை குறிவைத்து மோசடி சம்பவங்கள் அரங்கேறி வருவதால் அந்த வங்கிக் கணக்குகளை மூடுவதற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை ஜனவரி 1 ஆம் தேதி முதல் அமல்படுத்த அனைத்து வங்கிகளுக்கும் ரிசர்வ் வங்கி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதன்படி, மினிமம் பேலன்ஸ் கூட வைக்காமல், நீண்ட நாட்களாக பயன்படுத்தப்படாமல் உள்ள கணக்குகளை மூன்று வகைகளாகப் பிரித்து அவற்றை மூடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் எந்தவொரு பணப் பரிவர்த்தனையும் செய்யப்படாத வங்கிக் கணக்குகள் செயல்பாட்டில் இல்லாத வங்கிக் கணக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மோசடி கும்பல்கள் இந்த வங்கிக் கணக்குகளை குறிவைத்து மோசடியில் ஈடுபடுவதால், அந்த வகை கணக்குகளை உடனடியாக மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல, 12 மாதங்களுக்கு மேலாக பணப் பரிவர்த்தனைகள் செய்யப்படாத கணக்குகள் செயலற்ற கணக்குகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையான வங்கி கணக்குகளையும் நிறுத்திவைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தக் கணக்குகளை மீண்டும் பராமரிக்க விரும்புவோர் வங்கிக் கிளைகளை மீண்டும் நேரடியாக அணுகி பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பல நாட்களாக இருப்புத் தொகை இல்லாமல் இருக்கும் ஜீரோ பேலன்ஸ் கணக்குகளை நிறுத்திவைக்கவும் ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. இந்த மூன்று வகையாக கணக்குகளை தவறான செயல்களுக்குப் பயன்படுத்துவதை தடுப்பதற்காக இந்த உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒரு வருடமாக வங்கிக் கணக்கை பயன்படுத்தாமல் வைத்திருந்தால் உடனடியாக ஒரே ஒரு பரிவர்த்தனையை மேற்கொள்வதன் மூலம் இந்த நடவடிக்கை தடுத்து உங்கள் வங்கிக் கணக்கை மீண்டும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். 2 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தாமல் இருப்பின் வங்கிக் கிளையை நேரடியாக அணுகி உங்களுடைய அக்கவுண்டை புதுப்பித்துக் கொள்ளலாம். அதே சமயம், உங்கள் வங்கிக் கணக்கில் மினிமம் பேலன்ஸ் எனும் குறைந்தபட்ச இருப்புத் தொகை வைத்திருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**- K.கலைமணி**



# AI-ன் வளர்ச்சி: மனித எதிர்காலம் என்னவாகும்?

இந்த காலத்தில் ஏஐ துறை படுவேகமாக வளர்ந்து வருகிறது. இந்த ஏஐ வளர்ச்சி காரணமாக இந்தியாவில் பல லட்சம் தொழிலாளர்களின் வேலை ஆபத்தில் இருப்பதாகப் பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உலகளவில் இதன் பாதிப்பு இருக்கும் என்ற போதிலும், இந்தியாவில் அதன் பாதிப்பு மோசமாக இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஏஐ துறை தான் இப்போது படுவேகமாக வளர்ந்து வருகிறது. திரும்பிய பக்கமெல்லாம் ஏஐ என்று இருக்கும் சூழலே நிலவி வருகிறது. ஏஐ டூல்கள் நமக்கு பல்வேறு விதங்களில் மிகப் பெரியளவில் உதவி வருகிறது.

அதேநேரம் வரும் காலத்தில் ஏஐ டூல்கள் காரணமாக மிகப் பெரியளவில் வேலைகள் பறிபோகும் என்று வல்லுநர்கள் ஒரு தரப்பில் தொடர்ந்து எச்சரித்து வருகிறார்கள். இதற்கிடையே சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையிலும் ஏஐ தொடர்பான கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

ஏஐ துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாகத் தொழிலாளர் சந்தையில் இடையூறுள் ஏற்படலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதேநேரம் தற்போது செயற்கை நுண்ணறிவு இப்போது தயார் நிலையில் இல்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொருளாதார ஆய்வறிக்கை:**

ஏஐ வரும் காலத்தில் சமூக பொருளாதாரத்தில் சிக்கலை ஏற்படுத்தலாம் என்றும் இதனால் அதைச் சமாளிக்க வலுவான நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார ஆய்வறிக்கையில் Labour in AI Era: Crisis or Catalyst? என்ற தலைப்பில் இது தொடர்பான விரிவான கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

ஏஐ டூல்களின் தாக்கம் சர்வதேச அளவில் தொழிலாளர் சந்தையில் இருக்கும் என்ற போதிலும், இந்தியா ஒரு பெரிய நாடாக இருப்பதாலும் இங்குத் தனிநபர் வருமானம் குறைவாக இருப்பதாலும் இந்த பிரச்சினை இங்குப் பெரிதாக வெடிக்கலாம் என்று அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பு:**

அந்த ரிப்போர்ட்டில் மேலும், "இது அனைத்து தரப்பையும் மோசமாகப் பாதிக்கும். இதன் காரணமாக நாட்டின் வளர்ச்சி திறன் பாதிக்கப்படும். இன்று மனிதர்கள் செய்யும் பல முக்கிய பணிகளை வரும் காலங்களில் அதிக அறிவுத்திறன் வாய்ந்த இந்த இயந்திரங்களே மேற்கொள்ளும். சுகாதாரம், நீதி, கல்வி, வணிகம் மற்றும் நிதிச் சேவைகள் போன்ற துறைகளில் முக்கியமான முடிவெடுக்கும் செயல்முறைகளில் மனிதர்களை விட ஏஐ சிறப்பாக செயல்படுகிறது.

இதன் காரணமாகத் தொழிலாளர் சந்தையில், குறிப்பாக அடிப்படை ஊதிய வேலைகளில் ஏஐ டூல்கள் கவலை அளிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்" என்று கூறப்பட்டுள்ளது. மேலும், ஏஐ போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளப் பொருத்தமான திறனை இளைஞர்கள் வளர்த்துக் கொள்வது குறித்தும் சில கருத்துகள் அதில் இடம்பெற்றுள்ளது.

**வேலைகள் பறிபோகும்:**

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) ஆய்வை மேற்கோள்காட்டியுள்ள பொருளாதார ஆய்வறிக்கை, ஏஐ துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாக உலகளவில் கிட்டத்தட்ட 75 மில்லியன் வேலைகள் பறிபோகும் ஆபத்தில் இருப்பதாகக் கூறியுள்ளது. சுமார் 300 மில்லியன் வேலைகள் ஆபத்தில் இருப்பதாக கோல்ட்மேன் சாக்ஸ் கூறுவதும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் குறைந்த ஊதியத்தில் பலர் வேலையில் இருக்கும் சூழலில், ஏஐ காரணமாக அவர்கள் பணி பறிபோகும் ஆபத்து இருக்கிறது என்றும் இதனால் அவர்கள் திறமையான வேலைகளுக்கு மாற்றுவதற்கு நிறுவனங்கள் உதவுவது அவசியம் என்று அந்த பொருளாதார ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

– அன்புமணி

# மூக்கனூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாம்!



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த மூக்கனூர் கிராமத்தில் இன்று காலை 10 மணியளவில் மாவட்ட ஆட்சியர் சிவ சவுந்தரவள்ளி தலைமையில் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. முகாமில் சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை எம்எல்ஏ தேவராஜ் கலந்து கொண்டு பேசியபோது:-

முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்றும் இன்னும் மூன்று மாதங்களில் விடுபட்ட ரன் ரேசன் அட்டை தாரர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

அதனைத்தொடர்ந்து பேசிய மாவட்ட ஆட்சியர் சிவ சவுந்தரவள்ளி பேசும் போது: மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுதான் தான் கலந்து கொண்டு பேசும் முதல் பொதுக் கூட்டம் என்று பேசினார். பொதுமக்கள் தங்களுடைய குறைகள் எதுவாக இருப்பினும் அதிகாரிகளை நேரடியாக அணுகி தெரிவிக்கலாம் என்றும் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த குறைகளைக் இனிவரும் கூட்டங்களில் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பேசினார்.



அதனைத் தொடர்ந்து வருவாய் துறை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் சிவ சவுந்தரவள்ளி மற்றும் எம்எல்ஏ தேவராஜ் ஜோலார்பேட்டை ஒன்றிய சேர்மன் சத்தியா சதீஸ்குமார் ஆகியோர் இணைந்து வழங்கினர். உடன் நாட்றம்பள்ளி வருவாய் வட்டாட்சியர் ராமகிருஷ்ணன் கிராம நிர்வாக அலுவலர் அருணா ஊராட்சி தலைவர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

– S.மோகன்

# Chandru Law Academy

Gandhi Road, Ambika Street,
(Near David School), Velachery, Chennai - 42.
Tamil Nadu ✆ : 073396 50446



Conducting

## COACHING FOR MAGISTRATE / APP / DISTRICT JUDGE EXAMINATIONS

(All Major and Minor Acts)

**COURSES**

1 District Judge
2 Magistrate / Munsif
3 Assistant Public Prosecutor (APP)
4 All India Bar Examination (AIBE)
5 Common Law Admission Test (CLAT)














**Offline Class / நேரடி வகுப்புகள்**

Morning Batch :
Timings : 10.30 am to 1.30 pm
Separate Batches for
Week Days and
Saturday & Sundays

**Online Class / இணைய வழி வகுப்புகள்**

Evening Batch :
Timings : 5 pm to 8.30 pm
Weekly 4 Days
@ ZOOM APP

**@ VELACHERY Chennai.**

**R. CHANDRASEKARAN**
Advocate
Chandru Law Academy
Founder & Director

Note : No fees for specially challenged & Third gender person

For Registration Contact **+91 73396 50446 / 90804 48871**



# சித்த மருத்துவ குறிப்பு

## வல்லாரைக் கீரையின் நன்மைகள்!

இன்றைய காலச்சூழலில் பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு இல்லாமல் பெரும்பாலானோரை பாதிக்கும் ஒரு முக்கிய நோய் ஞாபக மறதி. இதனை தடுக்க நமது முன்னோர்கள் காலம்காலமாக தொன்றுதொட்டு பயன்படுத்தி வந்த ஒரு வகை. மூலிகை கீரை வகைதான் வல்லாரை.

இந்தக் கீரை ஈரப்பதம் நிறைந்த இடங்களில் நன்கு படர்ந்து வளரக்கூடிய தாவரமாகும் இதன் இலைகள் மூளை செயல்பாட்டினை ஊக்குவிப்பதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. மேலும் மன அழுத்தத்தை குறைக்கவும் பயன்படுகிறது. இதில் காணப்படும் அசியேட்டிகாசிட் மற்றும் மேடிக்காசோசைடு போன்ற மூலக்கூறுகள் இதன் மருத்துவ பண்புகளுக்கு காரணமாக திகழ்கிறது.

இது பண்டைய காலத்திலிருந்து. ஆன்மிகம் மற்றும் மருத்துவ பயன்பாட்டிற்காக ஆசிய நாடுகளில் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலகளவில், இது இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மலேசியா மற்றும் ஆப்பிரிக்கா உள்ளிட்ட. பல்வேறு நாடுகளில் காணப்படுகிறது.

### வல்லாரையின் அறிவியல் பெயர்

சென்டில்லா ஆசியாடிக்கா (centella Asiatica) என்பதாகும். இதன் இலைகள் செடியின் இருபுறமும் மெல்லிய வட்ட வடிவில் காணப்படும். இதில் சிறிய வெள்ளை அல்லது இளஞ்சிவப்பு நிற பூக்கள் காணப்படும். இதில் பெக்டிக் அமிலம் உள்ளதால் இலைகள் சற்று கசப்பு சுவையுடன் இருக்கும். ஆனாலும் வல்லாரைக் கீரை இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு மற்றும் கசப்பு சுவை கலந்து காணப்படும் ஒருவகை சிறப்பு தன்மை வாய்ந்த கீரையாகும். இக்கீரை பல்வேறு நாடுகளில் காணப்பெற்றாலும் இது இந்தியாவை தாயகமாக பெற்றது.

### வல்லாரையில் காணப்படும் சத்துகள்

இரும்புச்சத்து, கால்சியம் மற்றும் மக்னீசியம், பாஸ்பரஸ் இக்கீரையில் நிறைந்திருக்கும். மேலும் வைட்டமின்கள் ஏ,பி,சி அதிக அளவில் இக்கீரையில் உள்ளது. வல்லாரையில் பீட்டாகரோட்டீன் அசியேட்டிகாசிட், மேடிக்காசோசைடு, ஃபிளேவோனாய்டுகள் போன்ற பல்வேறு மூலங்கள் இதில் காணப்படுகின்றன.

### வல்லாரையின் மருத்துவ குணங்கள்

மூளை மற்றும் மனநலம் காப்பதில் வல்லாரை சிறந்து விளங்குகிறது. நினைவாற்றலை அதிகரித்து கவனம் செலுத்தும் திறனை மேம்படுத்த உதவுகிறது. குறிப்பாக அல்சைமர் மற்றும் மூளை நரம்பியல் சீர்குலைவுகளை தடுக்க பயன்படுகிறது. தோல் நோய்களை குணப்படுத்துவதில் வல்லாரை நன்கு உதவுகிறது. குறிப்பாக இதில் காணப்படும் ஆன்டி ஆக்ஸிடண்டுகள் செல் அழிவதை தடுத்து வயது மூப்பினை தள்ளிப்போட உதவுகிறது.

மேலும் வைட்டமின் சி வல்லா ரையில் நிறைந்து உள்ளதால் தோல் சார்ந்த அனைத்து பிரச்னைகளுக்கும்

தீர்வாக வல்லாரை திகழ்கிறது. இரும்புச்சத்து இக்கீரையில் நிறைந்து காணப்படுவதினால் ரத்தத்தை சுத்தப்படுத்த உதவும். ரத்த சோகையை போக்க உதவும். இதில் கால்சியம் செரிந்து உள்ளதால் உடல் சோர்வு, நரம்பு தளர்ச்சி மற்றும் கெட்ட கொழுப்புகளை அகற்றி இதயத்தை பாதுகாக்கவும் வல்லரரை பயன்படுகிறது.

செரிமான பிரச்னையை சரி செய்யவும் வயிற்றுப்புண் பிரச்னையை தடுக்கவும் வல்லாரை நல்ல மருந்தாக பயன்படுகிறது. வல்லாரை இயற்கையாகவே குளிர்ச்சித் தன்மை கொண்டு இருப்பதனால் உடல் வெப்பத்தை குறைத்து சுறுசுறுப்பினை அளிக்கிறது. கல்லீரல் பலம்பெற, மஞ்சள்காமாலை நோய்க்கு மருந்தாக, மூட்டு வலி, இருமல், காய்ச்சல், காசநோய், தலைவலி மற்றும் மார்புச்சளி போன்ற பல்வேறு நோய்களை குணப்படுத்துவதில் முக்கிய பங்கினை வல்லாரை வகிக்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கீரைக்கு தமிழ் மரபிலும் மருத்துவத்திலும் சிறப்பு உண்டு என்பதை கீழ்க்கண்ட வரிகளில் உணரலாம்.தோல் நோய் தீர்க்கும் மூலிகை நோய் நசிக்கும் வல்லாரை கண்டவர் வாழ்நாளில் மறக்கா வல்லறி தந்தது. ஆக வல்லாரை தாவர உலகில் மறைமுக புதையலாக விளங்குகிறது. இதன் மருத்துவ குணங்கள் மனித குலத்துக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக உள்ளது. ஆகையால் வல்லாரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். அறிவு திறனை பெருக்கிக் கொள்ளுங்கள்.

வல்லரைக் கீரையை பயன்படுத்தும் முறை

பாசிப்பருப்புடன் சேர்த்து வாரத்தில் ஒருவேளை உட்கொள்ளலாம்.. குறிப்பாக உட்கொள்ளும் அளவில் மிக கவனம் செலுத்த வேண்டும். அளவு அதிகமானால் மூளை செயல்பாடு அதிகரித்து பின் விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.வல்லாரை சாற்றினை தேன் மற்றும் மோர் கலந்து 3:1 என்ற விகிதத்தில் வாரம் ஒருமுறை அருந்தலாம். வல்லரைப் பொடியாகவும் செய்து உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

- D.பாமா

# கடனை வசூலிக்க டார்ச்சர் செய்தால் 10 ஆண்டுகள் சிறை, ரூ.5 லட்சம் அபராதம்

## கர்நாடகா அரசு அதிரடி சட்டம்

கடன் வாங்கியோரை, கடன் கேட்டு டார்ச்சர் செய்தால், 10 ஆண்டுகள் சிறை மற்றும் 5 லட்சம் அபராதம், நிலுவையில் உள்ள கடன் வட்டியுடன் தள்ளுபடி செய்யப்படும் என கர்நாடக அரசு அவசர சட்டம் கொண்டு வந்தது




வங்கிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனத்திடம் கடன் பெற்றவர்கள் அந்த கடனை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கட்ட முடியவில்லை என்றால், ஒரு கட்டத்திற்கு மேல் கடன் பெற்றவர்களை தொடர்பு கொண்டு,கடனை உடனடியாக திருப்பி செலுத்தும்படி நிறுவனத்தால் வற்புறுத்தப்படுவார்கள்

குறிப்பாக கிரெடிட் கார்டு மற்றும் கடன் வழங்கும் செயலிகள் மூலம் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க முடியாத சூழலில் கடன் கொடுத்தவர்களின் டார்ச்சர் தாளாமல் ஏற்படும் தற்கொலை, அவதூறுகளைத் தடுக்க இந்த அவசர சட்டம்

இதற்கு முடிவு கட்ட கர்நாடக அரசு, சிறுகடன் சட்டத்தில் (MicroFinance) கட்டாய நடவடிக்கைகளை தடுத்தல் என்ற திருத்தத்தை கொண்டு வந்தது. இதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. எனினும் கடன் கொடுத்தவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கூறி இந்த அவசர சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்து மாநில அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

- R.சஞ்சீவ் குமார்

# தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும்:

## அன்புமணி ராமதாஸ்



அரசுப் பள்ளிகளில் மும்மொழிகள் கற்பிக்கப்படுவதைக் கட்டாயமாக்கும் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தினால் மட்டும் தான் தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

பொதுப்பட்டியலில் உள்ள கல்வியில் மாநில அரசுகள் தனிக்கொள்கையை கடைபிடிக்க வகை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு மாறாக தேசியக் கல்விக் கொள்கையைத் திணிப்பதை மத்திய அரசு தவிர்த்திருக்க வேண்டும்.

புதிய கல்விக் கொள்கையின் ஓர் அங்கமான பி.எம்ஸ்ரீ பள்ளிகளை தமிழக அரசு திறக்க வேண்டும்; அவற்றில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க தமிழக அரசு மறுத்து விட்டதால், ஒருங்கிணைந்தக் கல்வித் திட்டத்தின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய ரூ.2,401 கோடி நிதியை வழங்காமல் பல மாதங்களாக மத்திய அரசு தாமதப்படுத்தி வருகிறது. இந்த நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசு பல மாதங்களாக வலியுறுத்தி வருகிறது.

புதியக் கல்விக் கொள்கையை ஏற்க மறுப்பதைக் காரணம் காட்டி மத்திய அரசு நிதியை வழங்க மறுப்பதை ஏற்க முடியாது என்று பல தருணங்களில் பாட்டாளி மக்கள் கட்சி உறுதிபட தெரிவித்திருக்கிறது. ஆனால், மத்திய அரசு அதன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாமல் மும்மொழிக் கொள்கையை திணிப்பதில் உறுதியாக இருக்கிறது என்பதைத் தான் மத்திய கல்வியமைச்சரின் கருத்துகள் காட்டுகின்றன.

மும்மொழித் திணிப்பு என்ற போர் தமிழகத்தின் மீது 80 ஆண்டுகளுக்கு மேலாக தொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், அந்தப் போரில் ஒவ்வொரு முறையும் தமிழ்நாட்டு மக்கள் தான் வென்று வருகின்றனர். 1963-ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பு குறித்த சர்ச்சை எழுந்த போது, இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலமே அலுவல் மொழியாக நீடிக்கும்; இந்தி திணிக்கப்படாது என்று வாக்குறுதி அளித்திருந்தார். அதை மீறும் வகையில் மத்திய அரசு செயல்படுவது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது.

பொதுப்பட்டியலில் கல்வி இருக்கும் நிலையில், தேசிய அளவிலான கல்விக் கொள்கையை வகுப்பதற்கு மத்திய அரசுக்கு எவ்வளவு அதிகாரம் உள்ளதோ, அதே அதிகாரம் மாநில அரசுக்கும் உள்ளது. அதன்படி கடந்த காலங்களில் பல மாநிலங்கள் தங்களுக்கென்று தனிக் கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்தி உள்ளன. இப்போதும் கூட தமிழ்நாடு அரசு மாநிலக் கல்விக் கொள்கையை வகுத்து இன்னும் செயலாக்கம் செய்யாமல் வைத்திருக்கிறது. இது மாநில அரசின் உரிமை. இதை மத்திய அரசு மதிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு நிதி வழங்க வேண்டியது மத்திய அரசின் கடமை. அந்த நிதி தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்கு தானே தவிர, புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவதற்காகவோ, முன்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகவோ வழங்கப்படும் வெகுமதி அல்ல. அதனால், தேசியக் கல்விக் கொள்கையையும், தமிழ்நாட்டுக்கான நிதியையும் இணைத்து மத்திய அரசு குழப்பிக் கொள்ளக் கூடாது.

மத்திய அரசு நிதி ஒதுக்காததால், அரசுப் பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான பல திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் கிடக்கின்றன. எனவே, நியாயத்தையும், மாநில அரசின் உரிமைகளையும் மதித்து ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும்.

- ந.மதிவாணன்




# போதைப்பொருள் விழிப்புணர்வு குறும்பட போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு டிஜிபி சங்கர் ஜிவால் பரிசளிப்பு

போதைப் பொருள் புழக்கம் இல்லா தமிழ்நாட்டை உருவாக்க தமிழ்நாடு அரசு சார்பாக தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் போதைப்பொருளுக்கு எதிராக கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய விழிப்புணர்வு குறும்படத்தை டிஜிபி சங்கர் ஜிவால் வெளியிட்டார்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள கல்லூரிகளை சேர்ந்த 23 குழு மாணவர்களால் எடுக்கப்பட்ட குறும்படங்களில், முதல் 3 சிறந்த குறும்படங்கள் தேர்வுச் செய்யப்பட்டு அவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி டிஜிபி அலுவலகத்தில நடைபெற்றது. இதில் சிறந்த 6 குறும்படங்கள் திரையிடப்பட்டன.

முதல் 3 இடங்களுக்கு பிடித்த குறும்படங்களுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மீதமுள்ள அணிகளுக்கும் பரிசுத்தொகையுடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் காவல்துறை அமலாக்க கூடுதல் டிஜிபி அமல்ராஜ் ஐபிஎஸ் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய தமிழ்நாடு காவல்துறை டிஜிபி சங்கர் ஜிவால்:-

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள கல்லூரி மாணவர்கள் போதை பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு குறும்படம் எடுத்துள்ளனர். போதைப்பொருள் விநியோக கட்டுப்பாடு தொடர்பாக அதிக விழிப்புணர்வு மேற்கொண்டு வருகிறோம்.

போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வுகள் எடுத்து வருகிறோம். தியேட்டர்களில்







இந்த குறும்படத்தை வெளியிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்த கூறியுள்ளோம்.

ஆண்டி டிரக் ஸ்குவாட் அதிக கல்லூரிகளில் தொடங்கியுள்ளோம். Say no to drugs என்ற விழிப்புணர்வு அதிகளவில் ஏற்படுத்தபட்டு வருகிறது.

மாநில அளவில் அனைத்து கல்லூரிகளும் கலந்து கொள்ளும் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அரசை பொறுத்தவரை தொடர்ந்து விடாமல் விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களும் இணைந்து இதில் செயல்பட்டால் முழுமையாக போதைப் பொருட்களை தடுக்கலாம் என்று டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்தார்.

– S.ஜெயராஜ்





கந்தன், குமரன், வேலன், சரவணன், கார்த்திகேயன், சுப்பிரமணியன் என்று பல பெயர்களில் அழைக்கப்படும் முருகனுக்கு உகந்த தைப்பூச திருநாள், இந்த ஆண்டு ஜனவரி 25-ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதனால் கந்தன் வீற்றிருக்கும் ஆலயங்கள் அனைத்தும் விழாக்கோலம் பூண்டுள்ளன. முருகனுக்குரிய முக்கிய வேண்டுதல்களில் ஒன்று காவடி எடுப்பது. இந்த காவடி எடுக்கும் முறை பழனி மலையில்தான் தோன்றியதாம். அப்படிப்பட்ட பழனி தலத்தில் மிக முக்கிய விழாவாக கொண்டாடப்படுவது தைப்பூசம். தைப்பூசத்திற்கும் பழனி மலை தலத்திற்கும் மிகப் பெரிய தொடர்பு உள்ளது.

### அம்பாளும் தைப்பூசமும்

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாளில் சிவபெருமான், நடராஜராக தனித்து ஆனந்த தாண்டவம் ஆடினார். அதனை பிரம்மா, விஷ்ணு, பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகியோருக்காக சிதம்பரத்தில் அரங்கேற்றினார். இந்த நடனத்தை ரசித்துப் பார்த்த பார்வதி அம்மைக்கும் அதே போன்று தாண்டவமாட ஆசை வந்தது. அதேநேரம், சிவ பெருமானைப் போன்று அன்னையின் நடனத்தையும் காண பிரம்மா, விஷ்ணு உள்ளிட்டோர் ஆர்வம் கொண்டனர். ஆகையால், முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்டோரின் ஆசையை நிறைவேற்ற எண்ணிய அம்பிகை ஆனந்த தாண்டவம் நிகழ்த்திய நாள் தைப்பூச திருநாளாகும். சிவ பெருமான் ஆனந்த தாண்டவம் நிகழ்த்திய நாள் திருவாதிரை என கொண்டாடப்படுவதை போல், அம்பாள் நடனமாடிய திருநாள் தைப்பூசம் என பெயர்பெற்றது. அதனால் இந்நாள் அம்பிகை வழிபாட்டிற்குரிய தினமாக மாறியது. ஆனால் இந்நாள் முருகனுக்குரிய திருநாளாக மாறிய தலம்தான் பழனி.

### பழனிக்கும் தைப்பூசத்திற்கும் உள்ள தொடர்பு

பழனி மலை அடிவாரத்தில் பெரியநாயகி அம்பாள், கைலாச நாதருடன் தனிக்கோயிலில் வீற்றிருக்கிறாள். இங்கு சிவன் மற்றும் அம்பாள் சன்னதிக்கு நடுவே முருகன் சன்னதி உள்ளது. எனவே ஆலயத்தின் பிரதான தெய்வங்களாக பெரியநாயகி அம்மனும், சிவபெருமானும் இருந்தாலும், பிரதான வாசலும், கொடிமரமும் முருகன் சன்னதிக்கு எதிரிலேயே அமைந்துள்ளதால், கோயிலுக்குள் வரும் பக்தர்கள்



முதலில் முருகனை தரிசித்த பிறகே அம்பாள் மற்றும் சிவனை தரிசிக்க முடியும். காலப்போக்கில் இத்தலத்தின் முக்கிய தெய்வமாக முருகப்பெருமானே மாறினார்.

தைப்பூச விழாவிற்கான கொடியும், முருகன் சன்னதிக்கு எதிரில் உள்ள கொடிமரத்திலேயே ஏற்றப்பட்டதாம். இப்படி சிவனின் அம்சமாகவும், சக்தியின் அம்சமாகவும் முருகப் பெருமானே விளங்குவதால் தைப்பூசம் முருகனுக்குரிய வழிபாட்டு நாளாக மாறியது என்கின்றன புராணங்கள். மேலும் தைப்பூச விழா, பெரியநாயகி அம்மன் கோயிலிலேயே நடத்தப்பட்டு, விழாவின் ஏழாம் நாளில் நடக்கும் தேரோட்டமும் இக்கோயிலில் இருந்தே புறப்பட்டு வீதி உலா வருகிறது.

### முருகனுக்குரிய தைப்பூசத்தின் வரலாறு

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் அசுரர்களை அழிக்க முடியாமல் தேவர்கள் திணறினர். எனவே பல்வேறு இன்னல்களை கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர். தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று சிவபெருமானிடம் தேவர்கள் வேண்டினர். இதையடுத்து கருணைக்கடலான எம்பெருமான், தேவர்களின் முறையீட்டை ஏற்று உருவாக்கிய அவதாரமே கந்தன்.

### கந்தன் அவதரிப்பு

சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளியான 6 தீப்பொறிகள் 6 அழகான குழந்தைகளாகின. கார்த்திகைப் பெண்களால், அக்குழந்தைகள் வளர்க்கப்பட்டு பின்னர் ஆறுமுகங்களுடன் அவதரித்தவரே கந்தன் எனப்படும் முருகனாவார். சிவபெருமானின் தேவியான அன்னை பார்வதி தேவியானவள் ஆண்டி கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு ஞானவேல் வழங்கியது தைப்பூச நாளில்தான். அப்படி அளிக்கப்பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து தேவர்களைக் காப்பாற்றி நிம்மதி அடையச் செய்தார். அதன் காரணமாகவே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் கோயில்களை காட்டிலும் வெகுச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



### வெற்றி வேலின் சிறப்பு

அசுரர்களை வதம் செய்து வெற்றிக்கொண்ட முருகப்பெருமான் பயன்படுத்திய வேலினை வழிபட்டால், தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. மேலும், தீய சக்திகள் நமக்கு அடிபணிந்து நல்லருளை நல்கும் என்பதும் ஐதீகம்.

### தைப்பூச விரதம்

ஆண்டுதோறும் தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், மார்கழி மாத தொடக்கத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்குவார்கள். சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப்பார்கள். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுளிலும் முருகனடியார்கள் பலர் பாதயாத்திரையாகச் சென்று தைப்பூசத்தன்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

### பழனியில் கோலாகலமாய் கொண்டாடப்படும் தைப்பூசம்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பார்கள். அது போல முருகன் கோயில்கள் அனைத்திலும் மிக முக்கியமான விழாவாக தைப்பூசம் கொண்டாடப்படும் என்றபோதிலும், பழனியில் கூடுதல் சிறப்பாக தமிழகம் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விரதம் இருந்து ஆயிரக்கணக்கான முருக அடியார்கள் பாத யாத்திரை வருகிறார்கள். தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்துவதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தீராத நோய்கள் ஏற்பட்டு அவதிப்படுவோர், முருகக் கடவுளுக்கு காவடி எடுப்பதாக வேண்டிக் கொண்டால் அவர்களைப் பிடித்துள்ள நோய் அகன்று உடல் ஆரோக்கியம் பெறும் என்ற நம்பிக்கை பக்தர்களிடம் அழுத்தமாக உள்ளது. இதனால், முருகன் உறையும் அனைத்து தலங்களிலுமே தைப்பூசத்தன்று பக்தர்கள் காவடி எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இப்படி, தைப்பூச நாளுக்குரிய சிறப்பு என்ன என்பது பற்றிய விளக்கங்களை தெரிந்து கொண்டு அன்றைய நாளில் முறையாக விரதமிருந்து வழிபட்டு முருகன் அருளை முழுவதும் பெறுவோம். - S.ராதிகா



வீட்டு வசதி வாரியத்தால் கைப்பற்றப்பட்டு திட்டங்கள் ஏதும் நிறைவேற்றப்படாத இடங்கள்

# மீண்டும் நிலத்தின் உரிமையாளர்களிடமே ஒப்படைக்கப்படும்!

## வீட்டுவசதி துறை அமைச்சர் முத்துசாமி தகவல்!

சென்னை தலைமைச்செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வீட்டுவசதி துறை அமைச்சர் முத்துசாமி,

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த நோட்டீஸ் வழங்கப்பட்ட நிலங்கள், கையகப்படுத்த திட்டமிடப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீண்ட காலமாக பொதுமக்கள் விலக்கு சான்று கோரியும், நில எடுப்பிலிருந்து நிறுத்த கோரியும் தொடர்ந்து மனுக்கள் அளித்து வருகின்றனர்.

இதுபோல் 30 ஆண்டுகளாக தீர்க்கப்படாத இப்பிரச்சினைகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தீர்வு கண்டுள்ளார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 16 இடங்களில் சிறப்பு புகார் பெட்டிகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் மனுக்கள் பெற்றுள்ளோம்

இதன் பிறகு ஒரு குழு அமைக்கப்பட்டு அது கொடுக்கும் பரிந்துரைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10 ஆயிரம் ஏக்கர் வரை 30 ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த நோட்டீஸ் வழங்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இவை அனைத்தும் தற்போது கையகப்படுத்தாமல் விடப்படுவதால் 4 லட்சம் பயனாளிகள் இதன் மூலம் பயனடைவார்கள்.

வீட்டுவசதி வாரியத்தால் நோட்டீஸ் மட்டும் வழங்கப்பட்ட இடம், ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்ட இடம்,மொத்த பணமும் வழங்கப்பட்ட இடம் என பல்வேறு வகைகளாக பிரிக்கப்பட்டு உள்ளது.

வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு உள்ளதை மறைத்து பல இடங்களில் நில உரிமையாளர்கள் வேறு ஒருவருக்கு விற்பனை செய்துள்ளனர்.

தெரியாமல் இடத்தை வாங்கியவர்கள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளதை மனதில் வைத்து அரசு இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் முத்துசாமி கூறினார்.

இவ்விவகாரத்தில் ஓய்வு பெற்ற ஐஏஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் முழுமையான தகவலை அரசு பெறும். ஒரிரு மாதங்களில் அனைவருக்கும் Noc கிடைத்துவிடும் என்றும் அவர் கூறினார்.

வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு திட்டங்கள் ஏதும் நிறைவேற்றப்படாத இடங்கள் மீண்டும் நிலத்தின் உரிமையாளர்கள் பெற இருப்பதால் மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- K.J.ரமேஷ்

# பாலியல் வழக்கில் சிக்கிய 255 ஆசிரியர்களின் கல்வி சான்றுகள் ரத்து

## அன்பில் மகேஷ் விளக்கம்!

தமிழக முழுவதும் பாலியல் வழக்கில் சிக்கிய ஆசிரியர்கள் மற்றும் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களை தெரிவிக்குமாறு பள்ளி கல்லூரி துறை சுற்றறிக்கை அனுப்பியது.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்ட இந்த சுற்றறிக்கையின் படி அதிகாரிகள் பாலியல் வழக்கில் சிக்கி உள்ள ஆசிரியர்களின் பட்டியலை தயாரித்து வருகின்றனர்.

**255 ஆசிரியர்கள் மீது நடவடிக்கை...**

முதல் கட்டமாக ஆரம்ப பள்ளிக்கல்வியில் 80 ஆசிரியர்களும் பள்ளி கல்வித்துறையில் 175 ஆசிரியர்களும் ஆக மொத்தம் 255 ஆசிரியர்கள் பாலியல் வழக்குகளில் சிக்கி இருப்பது தெரியவந்துள்ளது. இவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அறிக்கையாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை பள்ளிக்கல்வித்துறை செயலாளர் ஆய்வு செய்து வருகிறார்.

**கல்வி சான்றுகள் ரத்து...**






இந்த ஆய்வின்படி சம்பந்தப்பட்ட 255 ஆசிரியர்களின் கல்வி சான்றுகள் ரத்து செய்யப்பட இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக ஆசிரியர்கள் பலர் பாலியல் வழக்குகளில் சிக்கி பள்ளி மாணவிகளுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தலை அளிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவற்றை கட்டுப்படுத்தும் விதத்திலும், தவறு செய்யும் ஆசிரியர் மீது துறை ரீதியாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும் வகையிலும் அவர்களது கல்வி சான்றுகளை ரத்து செய்ய பள்ளி கல்வித்துறை முடிவு எடுத்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**சட்டம் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள்...**

பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும் ஆசிரியர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்களது கல்வி சான்றுகளையும் ரத்து செய்து துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அண்மையில் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

– P.கார்த்திகேயன்




# பிரியாணி உனக்கு போட்டானே... பெரியாணி உனக்கு அடித்தானே...

## பாடல் படு வைரல்!

முருகனின் அறுபடை வீடுகளில் முதல் வீடான திருப்பரங்குன்றம் மலையில் ஒரு பகுதியில் உள்ள தர்காவுக்கு சென்றவர்கள் அங்கு பிரியாணி சமைத்து சாப்பிட்டதாக கூறி பிரச்சனை எழுந்தது.

கந்தன் மலையை, சிக்கந்தர் மலையாக மாற்ற பார்க்கிறார்கள் என ஒரு சாராரும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிபாட்டை தான் செய்கிறோம் என மற்றொரு சாராரும் கூறி வருவதால் பிரச்சனை நீடித்தது வருகிறது.

**மலையை காப்போம், திருப்பரங்குன்றம் புனிதம் காப்போம்!**

இந்த சூழலில் பிப்ரவரி 4-ஆம் தேதி இந்து முன்னணி அமைப்பினர் "மலையை காப்போம், திருப்பரங்குன்றம் புனிதம் காப்போம்" என்பதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கோர காவல்துறையினரால் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்து அமைப்புகளை சேர்ந்தவர்கள் சமூக வலைதளங்களில் தங்களது சமூகத்தை அழைத்து, மலையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு செய்திகளை பதிவேற்றி வந்தனர்.

**இந்து முன்னணி ஆர்ப்பாட்டம்...**

இந்து முன்னணி அமைப்பினர், இந்துக்கள் மற்றும் இதர ஆதரவு அமைப்புகளையும் தென் மாவட்டங்களான, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, திண்டுக்கல் ஆகியவற்றிலிருந்தும், மதுரை மாவட்டத்தின் பிற பகுதிகளிலிருந்தும் மற்றும் பல்வேறு கட்சிகளை சேர்ந்த நபர்களையும் ஒன்று திரட்டி திருப்பரங்குன்றம் சுப்பிரமணி சுவாமி கோவில் முன்பு உள்ள 16 கால் மண்டபத்தின் அருகே ஆர்பாட்டம் செய்ய ஆயத்தம் செய்தனர்.

இதனால் மத நல்லிணக்கத்தை பேணும் பொருட்டும், அசாதாரண சூழ்நிலை உருவாக வாய்ப்புள்ளது என்பதாலும், பொது அமைதியினை பாதுகாக்கும் பொருட்டும், மனித வாழ்வு, பொதுப் பாதுகாப்பு

மற்றும் அமைதியை கருத்தில் கொண்டும், மதுரை மாவட்டம் மற்றும் மாநகர் முழுவதும் வெளிநபர்கள் யாரும் பிரவேசிக்காத வகையில் பிப்ரவரி 3 காலை 6 மணி முதல் பிப்ரவரி 4 இரவு 12 மணி வரை இரண்டு நாட்களுக்கு மட்டும், 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் அதே நாளில் திமுக அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடத்தப்பட்ட ஊர்வலத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

இதை எதிர்த்து சில அமைப்புகள் தொடர்ந்த வழக்கில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, பழங்காநத்தம் சந்திப்பில் பிப்ரவரி 4 மாலை 5 முதல் மாலை 6 மணி வரை ஆர்பாட்டம் நடத்த அனுமதி அளித்து உத்தரவிட்டது.

அதன்படி, மேற்படி இடத்திற்கு தேவையான பாதுகாப்பு அளிக்கப்பட்டு, இந்து முன்னணியின் மாநில இணை அமைப்பாளர் தலைமையில் சுமார் 3,000 நபர்கள் கலந்து கொண்டு, ஆர்பாட்டம் முடிந்து கலைந்து சென்றனர்.

திருப்பரங்குன்றம் கிராம பகுதியை சேர்ந்த அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாகவும், மதச்சார்பின்றியும், மத நல்லிணக்கத்தை பேணும் வகையில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், வெளியூரை சேர்ந்த இரு தரப்பை சார்ந்த அமைப்பினர்கள் அப்பகுதி மக்களுடைய பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க முயற்சிப்பதை கட்டுப்படுத்தவும், பொது அமைதி மற்றும் மத நல்லிணகத்தை பேணவும், அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என மாவட்ட ஆட்சியர் சங்கீதா தெரிவித்துள்ளார்.

**பிரியாணி பாடல் வைரல்...**

இந்நிலையில் பிரியாணி உனக்கு போட்டானே, பெரியாணி உனக்கு அடித்தானே என்ற பாடல் சமூக வலைதளங்களில் படு வைரலாகி வருகிறது. பலரும் இந்த பாடலை பகிர்ந்து வருகின்றனர்.

கந்தன் மலையை காப்போம் என்ற அர்த்தத்தில் உணர்ச்சி பொங்க உள்ள இந்த பாட்டால் திமுக அரசுக்கு ரத்த கொதிப்பு எகிறியுள்ளதாக கூறப்படுகிறது. தொடர்ந்து அதிகரித்து வரும் திருப்பரங்குன்றம் பிரச்சனையால் திமுக அரசு செய்வதறியாமல் திகைத்து வருவதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

- தமிழ் வீரன்






## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
**8754582123**


TAMILNI
PRINTZ & GRAPHICS
ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION
DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER
WEBSITE
DESIGN
SERVICE
APPLY
PAN CARD
PASSPORT
ALL
ONLINE
SERVICE
DESIGN
MAGAZINE
NEWSPAPER
NEWS
ADDRESS:
3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097,
EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002
MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - February 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

